அகில இலங்கைத்

# தமிழ் மொழித் தினம்

## 1993




70·344
அகில
SL/PR

கல்வி அமைச்சு வெளியீடு

*With Best Compliments*

**SHABRA UNICO FINANCE LTD.,**

No. 61, New Bullers Road,
Colombo 4
T. P. No. 589310

370.344
அகில
சுக

# அகில இலங்கைத்

# தமிழ் மொழித் தினம்

# 1993

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
கொழும்புத் தமிழ்ச் சங்க நூலகத்திற்கு
திரு/திருமதி/செல்வி
க. தி. ஆறுமுகம்
அவர்கள் அன்பளிப்பாக அளித்தது
திகதி 13/11/2004



ස්වාමි විබුලානන්දර් — சுவாமி விபுலாநந்த அடிகள்

| | |
|---|---|
| අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යාංශයේ දෙමළ භාෂා අංශය මගින් බස්නාහිර පලාත් අධ්‍යාපන අමාත්‍යාංශයේ සහාය ඇති ව පවත්වන | கல்வி உயர்கல்வி அமைச்சின் தமிழ்மொழிப்பிரிவு மேல் மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் நடத்தும் |
| **සමස්ත ලංකා දෙමළ භාෂා උලෙල - 1993** | அகில இலங்கைத் **தமிழ் மொழித்தின விழா - 1993** |
| ස්ථානය :- නව කදිරේශන් ශාලාව, බම්බලපිටිය | இடம் : புதிய கதிரேசன் மண்டபம் பம்பலப்பிட்டி |
| දිනය හා වේලාව :- 1993.07.19 වැනි සඳු දින පස්වරු 02.45 ට | காலம் : 1993 - 07 - 19 திங்கள் மாலை 2.45 |
| ප්‍රධාන අමුත්තා -: ශ්‍රී ලංකා ජනරජයේ ගරු අගමැති රනිල් වික්‍රමසිංහ මැතිතුමා | பிரதம அதிதி : இலங்கைக் குடியரசின் மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள். |
| මුලසුන -: ගරු අධ්‍යාපන රාජ්‍ය ඇමැතිනී ආර්. එම්. පුලේන්තිරන් මැතිතුමිය. | தலைமை : கல்வி இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திருமதி. இராஜமனோகரி புலந்திரன் அவர்கள் |

34522



கல்வி அமைச்சு வெளியீடு

### இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மேன்மை தங்கிய சனாதிபதி

## டி. பீ. விஜேதுங்க அவர்களின் நல்வாழ்த்துக்கள்.

*1993 யூலை மாதம் 19ஆம் திகதியன்று கொழும்பில் அகில இலங்கை தமிழ்மொழித் தினத்தைக் கொண்டாடுவதற்குக் கல்வி உயர்கல்வி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதையறிந்து நான் உவகை கொள்ளுகிறேன். மாபெரும் இந்து சமயக் குரவரும் புகழ்பெற்ற தமிழ் அறிஞருமான சுவாமி விபுலாநந்தர் அடிகளாரின் ஞாபகார்த்த தினத்தோடு இந்தத் தமிழ்த்தினவிழா கொண்டாடப்படுகின்றது.*

*தமிழ்மொழித் தினப் போட்டிகள் வருடாந்தம் பாடசாலை மட்டத்திலும் பிரதேச மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் இறுதியாக அகில இலங்கை மட்டத்திலும் நடாத்தப்படுகின்றது. மாணாக்கர்கள் பல்வேறு ஆக்கத்திறன்கொண்ட செயற்பாடுகளில் கலந்துகொள்வதற்கு ஊக்கமளிப்பது கல்வி, உயர்கல்வி அமைச்சின் கொள்கையாகும். இந்தச் செயற்பாடுகளின்மூலம் நாடகம், சங்கீதம், நடனம், சொற்பொழிவு ஆகிய துறைகளில் தமது கைவண்ணத்தைக் காட்டும் வாய்ப்பு மாணாக்கர்களுக்குக் கிட்டும். ஆளுமையினையும் குணநலத்தையும் வளர்த்துக்கொண்டு நல்ல குடிமக்களாக வாழ்வதற்கு பள்ளிச்சிறார்களுக்கு வழிகாட்டுதல்தான் கல்வியின் இறுதிநோக்கமாக இருக்கின்றது.*

*இந்த விழாவினை ஒழுங்குசெய்ததற்கு அயராதுழைத்த கல்வி இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திருமதி. ஆர். எம். புலந்திரன் அவர்களையும் அவருடைய ஆர்வமிக்க உத்தியோகத்தர்களையும் நான் பாராட்டுகின்றேன். அகில இலங்கை தமிழ்மொழித் தினவிழா வைபவங்கள் இனிது நிறைவேற வேண்டுமென வாழ்த்துகின்றேன்.*

*1993 யூன், 12 ஆந் திகதி*

**டி. பீ. விஜேதுங்க**
*சனாதிபதி*

*With the best compliments*

# The City Agency

*DEALERS IN TRACTOR PARTS*

**399 1/5, Sri Sangaraja Mawatha**
**Colombo 12**

# பிரதம மந்திரி கௌரவ ரணில் விக்கிரமசிங்ஹ அவர்களின் ஆசிச் செய்தி.

## அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா – 1993

சுவாமி விபுலானந்தர் அவர்களின் ஞாபகார்த்த தினத்தையொட்டி அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா ஒன்றினை நடாத்துவதற்காகக் கல்வி, உயர்கல்வி அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். இத்தகைய சிறந்த கல்விமானுக்கு இப்படியான விழா ஒன்றினை எடுப்பது சாலவும் பொருந்தும் என நம்புகிறேன்.

ஒழுங்கமைக்கப்பட்ட போட்டிகளின் குறிக்கோள்களும் பாராட்டுதலுக்குரியனவாகும். பாடசாலை மாணவர்களிடையே தமிழ் மொழியையும், கலையியற்றேர்ச்சியையும், திறமைகளையும் அபிவிருத்தி செய்வதற்கான உத்தேசக் கொள்கைகள், பல இன மாணவர்களிடையே புரிந்துணர்வையும் நல்லுறவையும் வளர்ப்பதற்கு உதவுகின்றன.

மனிதனின் வாழ்க்கையில் மொழியானது மிகவும் முக்கிய பங்கை வகிக்கிறது. எமது பிரத்தியேகத் தேவையாயினு ம் சரி, காரியாலயத் தேவையாயினும் சரி முயற்சிகளுக்கும் வளர்ச்சிக்கும் உயிரோட்டமுள்ளது மொழியே. தமிழ் மொழி தற்போது அரசகரும மொழியாக்கப்பட்டுள்ளதால் அதன் அபிவிருத்தி பரவலாக்கப்பட்டுள்ளது என்பது நிச்சயம்.

இவ் விழாவில் பங்கு பெறு ம் யாவருக்கும் என் நல்வாழ்த்துக்கள்!

இவ் விழா சிறப்புற அமைய என் நல்லாசிகள்.

*ரணில் விக்கிரமசிங்க*
பிரதம மந்திரி.

150, ஆர். டி. மெல் மாவத்தை,
கொழும்பு - 3,
மே 31, 1993.

With the best Compliments
from

# Ambiga Jewellers,

## 77, Sea Street,
## Colombo 11

# மாண்புமிகு சுற்றுலா கிராமியத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சரின் ஆசிச் செய்தி

தமிழ் மொழியில் தலைசிறந்த கல்விமானாக விளங்கிய முத்தமிழ் வித்தகர் விபுலாநந்த அடிகளார் பிறந்த தினமாகிய ஜுலை 19 ஆம் திகதியைத் தமிழ் மொழித்தினமாக நிர்ணயித்திருப்பது சாலப் பொருத்த முடையதாகும்.

இத்தினத்திலே, 1993 – அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாட கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. இராஜமனோகரி புலந்திரன் அவர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருவதை அறிந்து பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழ் மாணவர்களது இலக்கிய இரசனையையும், கலை உணர்வுகளையும், ஆக்கத் திறனையும் வெளிக்கொணர்வதற்குத் தமிழ் மொழித் தின விழாக்கள் பெரிதும் பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை. மொழிப் பற்றினை வளர்ப்பதற்கும் இத்தகைய விழாக்கள் உறுதுணைபுரியும். அது மட்டுமன்றி, தமிழ் மொழி விழாக்களை நடத்துவதன் மூலம் ஆசிரியர் மாணவர் நல்லுறவு பலப்படுவதோடு அவர்களிடையே அவசியம் நிலவவேண்டிய புரிந்துணர்வும் விசாலமடையும்.

இவ்விழாவை நடத்தி வருகின்ற கல்வி அமைச்சையும், விழாவை நடத்துகின்ற திருமதி. இராஜமனோகரி புலந்திரன் அவர்களையும் பாராட்டுகின்றேன். விழா இனிது நடைபெற ஆசி கூறுகின்றேன்.

**சௌமியமூர்த்தி தொண்டமான்,**
சுற்றுலா, கிராமிய தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சர்.

17-06-1993.

*With the best compliments of*

**Easwaran Agencies**

**Transport Agents**

*Dealers for*
Mitsui Cement

**ST. ANTHONY'S CONSOLIDATED HARDWARE**

Robbialac Paints
Steel, Corporation Products, Pespra Tiles

Tel : 024 - 2440
No. 37, 1st Cross Street,
Vavuniya.

# மாண்புமிகு நீதி, உயர்கல்வி அமைச்சர் அவர்களின் ஆசிச் செய்தி.

கல்வி அமைச்சு ஏற்பாடு செய்துள்ள அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாமலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

சென்ற நான்கு வருடங்களாக இவ்விழாவைத் தொடர்ந்து நடாத்திவந்துள்ளோம். படிப்படியாக இவ்விழா வளர்ச்சியுற்றுத் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரதான விழாவாகக் கணிக்கப்படுகிறது.

தமிழ் மொழி உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்று. சென்ற ஐம்பது ஆண்டுகளில் இம்மொழிக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு - விசேடமாகத் தமிழ்நாட்டில் இம் மொழிக்கு உரிய இடமும் கௌரவமும் கிட்டியுள்ளது.

மொழி, கலை, மதம் என்பன எப்பொழுதும் வாழும். ஆனால், இவற்றைக் காலத்துக்குக்காலம் கொண்டாடிப் போற்றுவது வழக்கமாகும். மொழியும் கலையும் மக்கள் மத்தியில் அன்பாகப் போற்றி வளர்க்கப்பட்டு வருகின்றன. உலகில் தோன்றும் இராச்சியங்கள், ஆட்சிமுறை என்பனமறையலாம். மக்கள் பிறந்திறக்கலாம். ஆனால், மொழியோ மறைவதேயில்லை.

இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான வருடங்களாக இரண்டு மொழிகள் நின்றுநிலவினும் இவ்விருமொழிகளும் தக்கவளர்ச்சியின்றிக் காணப்படுவது ஒரு துக்ககரமான செய்தியாகும். இவ்விருமொழிகளும் ஒன்றிணையவேண்டும்.

பல இனத்தவரையும் ஒன்றுபடுத்தி இணைக்கும் சக்தி மொழிக்குத்தான் உண்டு. இந்நாட்டைப் பொறுத்தவரை இற்றைவரையில் தமிழோ அன்றிச் சிங்களமோ எம்மத்தியில் பரஸ்பர விஸ்வாசம், நம்பிக்கை, ஒற்றுமையை வளர்க்கவில்லை. இக்குறைபாட்டை நீக்குதல் வேண்டும். இது எமது தலையாய கடமையாகும். இரண்டுமொழிகளையும் நாமெல்லோரும்கற்றல் வேண்டும்.

தமிழ் மொழியை வளர்ப்பதும் பாதுகாப்பதும் இந்நாட்டிலுள்ள தமிழ்பேசும் தமிழ், முஸ்லீம் மக்களின் கடமையாகும். இத்தகு விழாக்களைக் கொண்டாடுவதும் மாணவியர் மத்தியில் போட்டிகளை நடாத்துவதும் தமிழ் மொழியைப் பற்றிய இரசிப்பும் பற்றும் மதிப்பும் கூடிக்கொண்டு வருவதற்கு உதவுகிறது.

பாலர் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்விவரை தமிழ்மொழி மூலமாகக் கற்றுத்தேறும் வாய்ப்பு எமக்கு உள்ளது. இன்று தமிழுக்குச்சம அந்தஸ்து உள்ளது. இன்னும் பல்வேறு நவீன துறைகளிலும் நாம் தமிழை எடுத்துச் செல்லல் எமது தலையாய கடமையாகும்.

நம்மத்தியிலுள்ள மொழிகள் பழையனவையாயிருப்பினும் இன்றைய மாணவமாணவியர் விஞ்ஞானக்கல்வி, தொழில்நுட்பத்துறைக்கான கல்வி என்பவற்றையும் தமிழ் மூலம் பெறலாம். எனினும், நாம் எதிர்நோக்குகிற சவால் "அறிவு" தான். அறிவு கால ஓட்டத்தில் விசாலமாக ஆகத் தமிழ் மூலம் அவ்விசால அறிவைப் பெற வாய்ப்பு அளிப்பதே நமது உன்னத இலட்சியமாக இருக்க வேண்டும். இம்மகோன்னத இலட்சியத்தை ஆசிரியர் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டும். அப்போதுதான் நாளைய அறிவுநிரம்பிய சமுதாயத்தை நாம் கண்டு மகிழலாம்.

இத்தமிழ் மொழித்தின விழா வெற்றிகரமாக நடந்தேற வேண்டும் என்று என்றும் வாழ்த்துகிறேன்.

**ஏ. ஸி. எஸ். ஹமீத். பா. உ,**
*நீதி, உயர்கல்வி அமைச்சர்,*
*உயர்கல்வி அமைச்சு,*
*கொழும்பு - 07.*

21 - 06 - 1993

*தேனினும் இனிய செந்தமிழ் என்றும் வாழிய,*
*வாழியவே!*
*அகில இலங்கைத் தமிழ் மொழித் தினவிழா*
*சிறப்புற*
*வாழ்த்துகிறோம்.*

•

•

•

•

**விவசாயிகளின் துணைவன்**

லோஸ்பேன்
அலோரான்
சுப்பர் காட்சல்பர்
சுமிசிடின்
வீடெக்ஸ்
வீடெம் - 400
வீடெம் - 600

உற்பத்தியாளர்

# அங்லோ பேட் லிமிட்டட்
# கொழும்பு

# மாண்புமிகு அமைச்சர் லொக்கு பண்டார அவர்களின் வாழ்த்துச் செய்தி.

அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவினையொட்டி வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதற்குக் கிடைத்த வாய்ப்புக்குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் மொழி பற்றி யானும் ஓரளவு அறிந்திருக்கின்றேன். உலகின் மிகவும் தொன்மையான மொழிகள் சிலவற்றுள் தமிழ்மொழியும் ஒன்று என்பதை உலகம் ஏற்றுக் கொள்கின்றது. இலக்கிய வளமும், இலக்கண வளமும் நிறைந்த செழுமையான மொழி தமிழ். இனிமையும், தெளிவும், அழகும், ஆழமும் பொருந்திய தமிழ்மொழியின் சிறப்பினால் ஏனைய பிறநாட்டு நல்லறிஞர் உள்ளங்களும் ஈர்க்கப்பட்டன. ஈர்க்கப்பட்ட மேனாட்டு அறிஞர்களும் தமிழுக்கு மேலும் அணிகள் பல செய்து அழகும், மெருகும் ஊட்டித் தமிழை அலங்கரித்து மகிழ்ந்தனர். தமிழுக்கு விழா எடுக்கும் போது மாணவர்கள் தமிழ் மொழியின் சிறப்பினையும் வனப்பினையும் அறிந்து பெருமையடைவதோடு, தமது மொழியின் வளர்ச்சிக்காகவும் மலர்ச்சிக்காகவும் பாடுபடவேண்டுமென்ற மனப்பாங்கினையும் உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

நாமகள் எனப்படுபவள் சரஸ்வதி, நாமகள் நாவிலுறைபவள் ஆதலாலே நாவில் இருந்து வரும் சொற்கள் ஒவ்வொன்றும் இனிமையும் பண்பும் மிக்கதாய் அமைதல் வேண்டும். தீய சொற்களைப் பேசுவோரது நாவில் நாமகள் உறைய மாட்டாள்.

ஒரு பிள்ளையின் கற்பனை, சிந்தனை, ஆற்றல், திறன் போன்ற யாவும் தாய்மொழி உணர்வின் மூலமே அபிவிருத்தியடைகின்றன. இத்னாற்றான் தாய்மொழியே மாணவர்களின் இயற்கையான கல்வி மொழியென்று அறிஞர்கள் வலியுறுத்துகின்றார்கள். இந்தவகையிலே தான் எமது நாட்டிலும் சுயமொழிக் கல்வித்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. எனவே தமிழ் பேசும் மாணவர்கள் தாய் மொழியாம் தமிழை விளக்கமாகவும், விருப்பமாகவும் கற்றுத் தமது ஆற்றல்களையும், திறன்களையும் வளர்த்துக்கொள்ளல் வேண்டும். தமிழ்மொழி போலவே தமிழர் நாகரீகமும் பண்பாடுங்கூடப் பழமையும் செழுமையும் வாய்ந்தது. தமிழ்மொழியைத் திறம்படக்கற்பதன் மூலம் தமிழ்பேசும் மாணவர் சமுதாயம் தமது நாகரிகம், பண்பாடு, கலை, கலாச்சாரம் போன்றவற்றை மறுமலர்ச்சி அடையச்செய்யும் மனப்பாங்கினையும் பெற்றுக் கொள்ளமுடியும்.

ஒரு சமுதாயத்தின் மொழி சிதையுமேயாயின் அச்சமுதாயம் அழிந்துவிடும். சமுதாயத்தை அழியாமற்காப்பது மொழி. அம்மொழியை அழியாமற்காப்பது அதன் இலக்கணம். எனவே மொழியைத் திருத்தமாகப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் அத்தோடு அதன் இயல்பினைச் செம்மையாக அறிவதற்கும் இலக்கண அறிவும் பயிற்சியும் இன்றியமையாதது. இதையுணர்ந்து தமிழ் மொழியினைக்கற்கும் மாணவர்கள் தமிழ் இலக்கணப் பயிற்சியிலும் அக்கறையுடன் நாட்டஞ்செலுத்தல் வேண்டும். நன்னூலார், தொல்காப்பியர், அகஸ்தியர் ஆகியோர் காலத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலக்கணத் தொன்மையோடும் தமிழ் மொழி விளங்கிவருகின்றது என்பதுபற்றியும் அறிந்து பெருமை கொள்ளலாம்.

சமாதானம், சகவாழ்வு, புரிந்துணர்வு ஆகியவற்றிற்கு, மொழியும் கலைகளும் உறுதுணையான ஊடகங்களாக அமைந்துள்ளன என்பதை உள்ளத்திற் கொண்டு, இந்த நாட்டில் ஒரு தாய் மக்களாக நாம் வாழ்வதற்கு இது போன்ற மொழித்தின விழாக்கள் உந்துசக்தியாக அமைய வேண்டும் என்று பிரார்த்தித்து எனது வாழ்த்துக்களையும் தெரிவித்தக் கொள்கின்றேன்.

**வி. ஐ. மு. லொக்குபண்டார,**
*கலாசார அலுவல்கள், தகவல்துறை அமைச்சர்.*

அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவுக்கு
எமது வாழ்த்துக்கள்

Liberty Palace,
Dealers in Fancy Goods, T. V. Deck Radios, Wrist Watches,
Wall Clocks Gift Items & Electrical Goods.

149, BAZAAR STREET,
VAVUNIYA.

T'PHONE : 024 - 2320

---

அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவுக்கு
எமது வாழ்த்துக்கள்

22, 21 கரட் சுத்தமான தங்க நகைகள்
ஓடர்களுக்கு குறித்த டிசைன்களில் செய்து கொடுப்பவர்கள்.

மோகனாஸ் ஜுவலர்ஸ்
ஹொறவபொத்தானை வீதி. வவுனியா

தொலைபேசி இல. 024 - 2472.

# ALL ISLAND TAMIL LANGUAGE DAY - 1993

It is with great pleasure, I extend my warm congratulations to the organisers of the All-Island Tamil Language Day.

I am sure, the Tamil Language Unit of the Ministry during its four year period service, has done its duty to lay a firm foundation for bringing about complete development of the Tamil speaking child. Language which is the vechicle of movement which facilitates effective communication, thinking, creativeness and expressions of vivid art forms brings about cohesion and symbolises cultural bindings.

It is a gesture to dedicate the Tamil Language Day Celebrations of 1993 to a great Tamil scholar and a saint, Swami Vipulanandar who had done great service to the language and through language to the education and culture of the Tamil speaking people. I wish this occassion a success.

**Sunethra Ranasinghe, M. P.**
Minister of Education Services.

*With best compliments from*

# Sri Thirupathy Agency

*GENERAL MERCHANTS AND COMMISSION AGENTS*

**130, 4th Cross Street,**
**Colombo 11.**

# கல்வி இராஜாங்க அமைச்சரின் ஆசிச்செய்தி

அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாமலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மனநிறைவு அடைகிறேன். தமிழ்மொழிக்கு விழாவெடுப்பது தமிழ்த்தெய்வத்துக்கு எடுக்கும் விழாவாகும். இனிமையுடன் எளிமையும் வரலாற்றுத்தொன்மையுடன் சிறந்த பாரம்பரியத்தையும் கொண்ட தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் பாக்கியவான்களே!

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன்தோன்றிய மூத்தமொழி தமிழ்" என்பர். இம்மொழி எம்மொழியும் கூறாத இலக்கியப் பெருமைகளைக் கூறுகின்றது. இத்தமிழ் மொழி அன்று போல் இன்றுஞ் சீரிளமைத் திறமையுடன் சிறப்பும் பெற்று வீறுநடை போடுகின்றது. இத்தகு சிறப்பு அம்சங்கள் அந்நிய ஆராய்ச்சியாளர்களையும் கவர்ந்து நிற்கின்றது.

தமிழ்மொழியிற் காணக்கூடிய இலக்கிய ஆக்கங்கள் காலத்தால் அழியாத பாரம்பரிய பண்பாட்டுச் செல்வங்கள். அவையே எமது நாகரிகத்தின் அடிச்சுவடுகள். அவற்றை அழியாது பாதுகாப்பதும், வளர்ப்பதும் தமிழ் பேசும் நல்லுலக மக்களின் உயிருக்கு நிகரான கடமையாகும். உலகின் பண்டைய மொழிகள் பல காலத்தால் அழிந்து போகச் சில வழக்கிழந்தவிடத்தும் தமிழோ குன்றாத இளமையும், குறையாத வளமும், வற்றாத செல்வமும், புத்துயிர்ப்பும் உடையதாய் வாழ்ந்தே வருகின்றது. அதனாலன்றோ பாரதிதாசனும் "தமிழை இனியது என்பேன். எனினும். . . தமிழை என்னுயிர் என்பேன் கண்டீர்" என்றார் மேலும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதொன்றுங்காணோம்" என்று பாரதியார் தமிழுக்கு மெருகூட்டினார்.

தமிழ்மொழிக்குத் தினங் குறித்துக் கொண்டாடுவது தமிழ்மொழிக்கு நாம் செய்யும் அரியதொண்டாகும். இதனைச் சிறப்பாகச் செய்வதால் தமிழர்களாகிய நாம் பெருமையடைகின்றோம். தமிழ்மொழியை வளம்பெற வளர்த்தது தமிழகம். பரந்துபட்ட தமிழகத்தின்பாற்பட்டதே ஈழவளநாடு. இவ்வீழத்தில் வாழும் தமிழ் மக்களும் தமிழ்மொழியை வளர்ப்பதில் என்றுமே சளைத்தவர்களல்லர். பல்வேறு புலவர்கள், அறிஞர்கள், கவிஞர்களைத் தன்னகத்தே கொண்டு தமிழுக்காக உழைத்தது ஈழம். இந்த வகையில் ஈழத் திருமகன் சுவாமி விபுலானந்தர் தமிழ்த் தொண்டில் முன்னணியில் நிற்கின்றவர். முத்தமிழ் வித்தகராய் விளங்கிய இவரின் ஞாபகார்த்தமாக இவ்விழா கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமானதே. தமிழ்ப் பணியுடன் கல்விப் பணியும், சமூகப் பணியுடன் சமயப் பணியும் புரிந்து தமிழ் உலகின்பால் நிலையான சிறப்பிடத்தைப் பெற்ற இவ்வடிகளாரின் புகழ் இத்தமிழ் மொழித்தின விழா வாயிலாகத் தமிழ் அன்புள்ளங்களில் நிலையாகப் பதிந்து விடும்.

ஒருவன் தன் கருத்துக்களைக் எடுத்துரைக்கவுள்ள ஒரே சாதனம் மொழியேயாகும். இம்மொழி மனிதநேயங்களை வளர்த்துச் சமூக உறவு விரிசல்களைக் குறைப்பது மட்டுமன்றி ஒற்றுமையை வலுப்படுத்துவதுமாய் உள்ளது. இம்மொழியானது ஒற்றுமை பேணுவதற்கே அல்லாது வேற்றுமைக்குத் தூபமிடுவதாயிருத்தலாகாது. மொழிப்பற்று இயற்கையானது. ஒருவனுக்குள்ள தாய்ப்பாசத்திற்கு நேர்நிகரானது. தாய்க்குச் செய்யும் கடமை போன்றதே தமிழ்மொழிக்கு எடுக்கும் இப்பெருவிழாவும் சிறப்புமலரும் என்றால் மிகையாகாது.

தமிழ்மொழித்தினப் போட்டிகளிலே விஷேட அம்சமாகவுள்ள சிங்கள மாணவர்க்கான தமிழ்ப்பேச்சுப் போட்டி இனவேறுபாடுகளைக் களைந்து மனிதநேயம், புரிந்துணர்வு, தேசிய ஒற்றுமையை வளர்க்கத்தக்கதாக அமைகிறது.

மொழிப்பற்று தமிழ்பேசும் அனைவரது உயிர்நாடியே. ஆனால், இம்மொழிப்பற்று மொழிவெறியாக மாறிவிடாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டியது அனைவரினதும் தலையாய கடமையாகும்.

இப்பெருவிழாவின் பின்னணியில் தத்தமது உணர்வு, உழைப்பு, ஒருமைப்பாட்டினைத் தந்து வெற்றிகரமாக நிறைவேறப் பணியாற்றிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியையும் வாழ்த்துக்களையும் கூறிநிற்கின்றேன்.

**இரா. புலந்திரன்**
கல்வி இராஜாங்க அமைச்சர். பா. உ.

*தொட்டனைத்துஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத்துஊறும் அறிவு*

*தமிழ் மொழித்தின விழா.*
*சிறப்புடன் இனிது நிறைவேற எமது நல்லாசிகள்*

○
○
○
○
○
○
○
○

**சிவசக்தி**
**கடைத் தெரு, வவுனியா.**
**தொலைபேசி இல : 024 - 2330**

*எம்மிடம் சகல விதமான வீட்டுப் பாவனைப் பொருட்களும்*
*மருந்து வகைகளும் பெற்றுக்கொள்ளலாம்.*

**SIVASAKTHI**
**BAZAAR STREET,**
**VAVUNIYA**
**T'Phone : 024 - 2330**

## மாண்புமிகு இந்துசமய, இந்து கலாசார இராஜாங்க அமைச்சர்
## பி. பி. தேவராஜ் பா. உ.
## அவர்களின் வாழ்த்துச் செய்தி

வருடந்தோறும் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்து நடாத்துகிற அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவினை ஒட்டி வெளியிடப்படும் சிறப்புமலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

மொழி ஒரு சமுதாயத்தின் உயிரோட்டம் நிறைந்த சக்தியாகும். மொழி வளர்ச்சியும், சமுதாய வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் மொழி பிரதான பங்கேற்கின்றது. இன்றைய நவீன ஆய்வுகள் மொழி, சமுதாயம், நாடு என்பவற்றுக்கிடையே உள்ள துல்லியமான தொடர்புகளை அடிநாதமாகக் கொண்டே அமைந்துள்ளன.

இந்நிலையில் பெருமை நலஞ்சான்ற தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்புகளையும் இலக்கியக் கருவூலங்களையும் நாம் பேணிப் பாதுகாக்கும் அதேவேளை இளைய தலைமுறையினருக்கும் கையளிக்கவேண்டிய கடமை எமக்கு உள்ளது. மொழியின் சிறப்பினையும், அதன் வளத்தையும் பாடசாலைக் கல்விமூலம் போதித்தாலும் போட்டிகள் ஏற்படுத்தி மொழியுணர்வை வளர்ப்பது மிகுந்த பயனளிப்பதாக அமையும்.

பிழையற உச்சரித்தல், எழுதுதல், இலக்கியங்களை அறிந்து கொள்ளுதல், நயத்தல் என்பவற்றோடு இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் வளர்க்கும் நோக்குடன் இசை, நடன நாடகங்களும் தமிழ்மொழித் தினப் போட்டிகளாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதாகும்.

ஒவ்வோராண்டும், தமிழ்மொழித் தினவிழா முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் ஞாபகார்த்த நாளில் கொண்டாடப்படுவது பாராட்டத்தக்கதாகும்.

அகில இலங்கைத் தமிழ்மொழித் தினவிழாவை மிகச் சிறப்பாக ஒழுங்குசெய்து நடாத்துவதில் உந்துசக்தியாக விளங்குகின்ற கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலந்திரன் அவர்களை மனமாரப் பாராட்டுகின்றேன்.

அத்துடன் பாடசாலை, மாவட்ட, மாகாண மட்டங்களில் போட்டிகள ஏற்படுத்தி நடத்துகின்ற கல்வி அமைச்சின் உயரதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் வாழ்த்திற்கு உரியவர்கள் ஆவர்.

மூன்றாவது முறையாக அரங்கேறுகின்ற தமிழ்த்தினவிழா மிகச்சிறப்புற அமையவும், விழாமலர் மணம் பரப்பவும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களை அளிப்பதில் நிறைவுகொள்கின்றேன்.

- **பி. பி. தேவராஜ்,**
இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சர்.

அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவுக்கு
எமது வாழ்த்துக்கள்

• • • •

**பெஸ்ட் செலக்ஸன்**

**204, பஸார் வீதி, வவுனியா.**

Visit for High Class
Textiles Centre

**BEST SELECTION**

204, Bazaar Street,
(Opposite Mosque)
Vavuniya.

---

*With the best compliments*
*of*

v
v
v
v
v

**Salams,**

65, Dam Street,
Colombo 12,
Tele : 434401.

# தேமதுரத் தமிழை உலகெலாம் பரவச் செய்வோம்

இந்நாட்டின் தேசிய மொழிகள் இரண்டில் நம் தாய்மொழியாகிய தமிழும் ஒன்றாகும், பெரும்பான்மை மக்களின் சிங்களத்தைப் போன்றே நம் செந்தமிழையும் போஷித்து – ஆசித்து நேசித்து வளர்க்க, அரசு அத்தனை கதவுகளையும் திறந்து விட்டிருக்கின்றது. இந்த நன்னோக்கின் அடிப்படையிலேயே அகில இலங்கை மட்டத்தில் தமிழ் மொழித் தினவிழா அதிசிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

மாணவர்கள் வெறும் புத்தகப் படிப்பில் மாத்திரம் தங்கிவிட வழிவைக்காமல், அவர்களின் பூமனங்களில் புதைந்து கிடக்கும் கலையுணர்வுகளையும் – மொழித்திறன்களையும் வெளிக்கொணர்ந்து, அவற்றின்மீது வெளிச் சமிட்டுக்காட்டி; ஊரறிய – உலகறியப் பாராட்டி, பரிசில் வழங்கி உற்சாகப்படுத்தும் உன்னத பணியை இத்தமிழ் மொழித் தினவிழா செய்து வருவது பாராட்டுக்குரிய அம்சமாகும்.

இதன் காரணமாகவே, தமிழ்மொழி மூலம் பயிலும் பாடசாலை மாணவர்களிடையே பேச்சு – எழுத்து – நடனம் – நாடகம் – பாஓதல் – பாட்டு என்று பலதரப்பட்ட போட்டிகளை கோட்டம், மாகாணம், தேசிய மட்டங்களில் நடத்தி தமிழ்மொழித் தினவிழா நடத்துவோர் உற்சாகப்படுத்தி வருகின்றனர்.

இத்தமிழ் மொழித் தினவிழா இன்னொரு வழியிலும் சிறப்படைகின்றது. தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர் என்னும் நிலையில் முஸ்லிம் மாணவர்களும் – ஆசிரியர்களும் தமிழ் மாணவர்களுடனும், ஆசிரியர்களுடனும் ஒன்றிணைந்து இத்தேன்தமிழ் விழாவைத் தேசிய ரீதியில் ஆண்டு தோறும் அருமையாகவும் – அழகாகவும் கொண்டாடி ஐக்கியராகமிசைத்து வருகின்றனர். சமகால நாட்டுப் பிரச்சினைகளின் நடுவே, வளர்ந்து வரும் மாணவ சமுதாயத்திடையே இந்த ஐக்கியபாவம் மலர்ந்து வருவது மகிழ்ச்சிக்குரியதே!

தமிழை வளர்ப்பதில் பிற சமயத்தவர்களுக்கு எவ்வகையிலும் சலிக்காமல் முஸ்லிம்களும் அளப்பரிய பணிகளை ஆற்றி வந்துள்ளனர் என்பதை யார் மறந்தாலும் தமிழ்த்தாய் மறக்கமாட்டாள்.

அன்று போலவே இன்றும் முஸ்லிம்கள் சிறப்புத் தமிழ்ப்பணி ஆற்றி வருவதை நாம் காண்கிறோம். அந்த வகையில் தமிழ்த்தின விழாவினைச் சிறப்பாக நடாத்திச் சாதனை படைப்பதில் முஸ்லிம்களும் பங்காளிகளாகப் பணியாற்றுவது பொருத்தமான செயலாகும்.

இவ்விழாவைச் சிறப்பாகவும், வெற்றியாகவும் நடாத்திவரும் கல்வித்துறை சார்ந்த சகலரையும் நான் தமிழ் வார்த்தை மலர்களால் வாழ்த்துகின்றேன்.


**அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், பா. உ.**
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள்
இராஜாங்க அமைச்சர்.

34, மலேவீதி, கொழும்பு - 02,
24 - 06 - 1993.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

நம்பிக்கையின் சின்னம் P. M. S.

நங்கையர் விரும்பும் நவநாகரீக நகைகளுக்கு

**பி. எம். எஸ். தங்கமாளிகை**

170, கடைத்தெரு, வவுனியா.

Our Guaranted your protection
For latest designs up to date Patterns

VISIT

## P. M. S. Gold House

170, Bazaar Street, Vavuniya.

---

With the best compliments of

# Asian Hardware

*Suppliers of Building Materials, Electrical goods and Cement. Specialists in Lanka Wall Tiles, Floor Tiles and Bathroom Fittings Authorised Dealers for C eylon steel corporation, S-lON P. V. C. Pipes and C. I. C. Paints Etc.*

37, Mill Road,
Vavuniya.

Telephone : 024 - 2336
Cable RIYAS.

# கொழும்பு பிரதி மாநகர முதல்வர் க. கணேசலிங்கம் அவர்களின் ஆசிச்செய்தி

அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழா இரண்டாவது தடவையாகவும் கொழும்பு மாநகரில் நடைபெறுவதையிட்டும், இதனையொட்டி வெளிவருகின்ற விழாச் சிறப்புமலருக்கு ஆசிச்செய்தி ஒன்றினை அளிப்பது குறித்தும், கொழும்பு மாநகரசபையின் பிரதி நகர முதல்வர் என்ற கோதாவில் நான் மிகவும் மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகின்றேன்.

தமிழ் மொழி மிகவும் பழமைவாய்ந்த மொழி; அழகார்ந்த மொழி; மிகவும் இனிமையும் எளிமையும் வாய்ந்த மொழி. உலகின் மிகத் தொன்மைவாய்ந்த கிரேக்கம், சீனம், ஹீப்ரு, ஆரியம் முதலான மொழிகளுடன் தமிழ் மொழியும் வைத்து எண்ணப்படுகிறது. கன்னடமும், களிதெலுங்கும், கவின்மலையாளமும், துளுவும் தன்னிடத்தே தோன்றி ஒன்று பலவாயிடினும் இன்னும் இளமை குன்றா எழிலுடன் விளங்கும் தமிழ் அன்னையின் சீரிளமைத் திறன் வியந்து தமை மறந்து போற்றுகின்றனர் அறிஞர்கள் பலர்.

இற்றைவரை இறைவர்கள், அரசர்கள், வள்ளல்கள், சான்றோர்கள், சமயகுரவர்கள், பெரும்புலவர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள் ஆகியோரே தமிழ் மொழியினைப் பேணிக்காத்து வளர்த்து வந்துள்ளனர். இன்றோ, பள்ளி மாணவர்களும் ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் முனைந்து தமிழ் மொழியின் வளர்ச்சிப்பணியில் தம்மையும் ஈடுபடுத்தி வருவது பாராட்டுக்குரியது. தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகைசெய்யும் பணியிலும் தமிழ் பேசும் மாணவர்களது பங்கு பெரிதும் விளங்கட்டும்.

நமது நாட்டைப் பொறுத்தவரை சிங்கள மொழியுடன் தமிழ்மொழியும் அரியாசனத்தில் சரியாசனம் பெற்று அமர்ந்துவிட்டது. எனவே, தமிழை மேன்மேலும் சிறக்கச்செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

இவ்வாண்டு தமிழ் மொழித்தினப் போட்டியில் சிங்களப் பிள்ளைகளும் சேர்ந்து கொள்ளக்கூடிய முறையில் நிகழ்ச்சிகள் அமைந்துள்ளமை பாராட்டுக்குரிதாகும். அதேபோன்று சிங்கள மொழித்தின நிகழ்ச்சிகளில் தமிழ் மாணவர்களும் பங்குபற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்தல் வரவேற்கத்தக்கதாகும். இரு இனத்தவர்களும் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் ஒற்றுமையுடனும், சகோதரத்துவத்துடனும் வாழ்வதற்கு இந்த ஏற்பாடு சிறந்த முன்னேற்பாடாகும்.

பெரியவர்களுக்காக நடைபெறும் தமிழ் சாகித்திய விழாவும், சிறுவர்களுக்காக நடைபெறும் தமிழ் மொழித் தின விழாவும், குறிப்பாக, கொழும்பு வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு பெரும்மகிழ்ச்சியை ஊட்டுகின்றன.

அகில இலங்கைத் தமிழ் மொழித் தின விழாவின்
இனிய நிறைவுக்கு எனது நல்லாசிகள்.

**க. கணேசலிங்கம்**
பிரதி மாநகர முதல்வர்

எமது நல்வாழ்த்துக்கள்

F
F
F
F
F
F
F
F
F
F
F
F
F
F
F

SUBRAMANIAM & CO.,

சுப்பிரமணியம் அன் கோ.

198, 4th Cross Street,
Colombo - 11.

Phone : 323844

## MESSAGE FROM THE SECRETARY

## MINISTRY OF EDUCATION AND HIGHER EDUCATION

I deem it a great privilege and pleasure in sending this message to the Souvenir to be published on the occasion of the All Island Tamil Language Day Celebrations 1993 to be held on the 19th of July in Colombo. Nineteenth of July is the remembrance day of the erudite Sri Lankan Tamil scholar Swami Vipulananda first Professor of Tamil in the University of Annamalai and the University of Ceylon who has contributed immensely for the development of Tamil Language and Literature.

I am aware that, in connection with the above celebrations, competitions are being held among school children in Drama, Dance, Speech, Music, Creative Writing, Essay Writing and in other relevant areas, firstly at the Divisional Level, then at the Provincial Level and finally at the All Island Level. The various competitions held among school children provide an ample and golden opportunity for the students to display their potentialities, besides instilling in them love and pride for their monther tongue. They foster the developement of communicative skills such as listening, speech, writing and reading. Participation in these competitions enables the child to adjust himself or herself to society by imbibing qualities like understanding, tolerance and respect for others.

I take this opportunity to thank the Ministry Officials, Provincial Officials, Principals Teachers and students who have worked hard to make the Tamil Day a great success.

I wish the All Island Tami Language Day 1993 all success.

**N. V. K. K. Weragoda**
Secretary,
Ministry of Education and ~~Higher Education~~.

Cultural affairs

*With the best compliments*
*from*

# K. K. Krishnapillai & Co.,

IMPORTERS, EXPORTERS AND GENERAL MERCHANTS

***No. 171, Fourth Cross Street,***
***Colombo 11***

***Telephone : 329325, 438558.***

# வாழ்த்துச் செய்தி

வருடந்தோறு ம் கல்வி அமைச்சு ஏற்பாடு செய்து நடாத்துகின்ற அகில இலங்கைத் தமிழ் மொழித்தின விழாவினை ஒட்டி வெளியிடப்படும் சிறப்புமலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

மொழி ஒரு சமுதாயத்தின் உயிரோட்டம் நிறைந்த சக்தியாகும். மொழி வளர்ச்சியும், சமுதாய வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்துள்ளன. ஒரு நாட்டின் அபிவிருத்தியில் மொழி பிரதான பங்கேற்கின்றது. இன்றைய் நவீன ஆய்வுகள்; மொழி, சமுதாயம், நாடு என்பவற்றுக்கிடையே உள்ள துல்லியமான தொடர்புகளை அடிநாதமாகக் கொண்டே அமைந்துள்ளன.

இந்நிலையில் பெருமை நலஞ்சான்ற தமிழ்மொழியின் தொன்மைச் சிறப்புகளையும் இலக்கிய கருவூலங்களையும் நாம் பேணிப் பாதுகாக்கும் அதேவேளை, இளைய தலைமுறையினருக்கும் கையளிக்கவேண்டிய கடமை எமக்கு உள்ளது. மொழியின் சிறப்பினையும், அதன் வளத்தையும் பாடசாலைக் கல்விமூலம் போதித்தாலும் போட்டிகள் ஏற்படுத்தி மொழியுணர்வை வளர்ப்பது மிகுந்த பயனளிப்பதாக அமையும்.

பிழையற உச்சரித்தல், எழுதுதல், இலக்கியங்களை அறிந்துகொள்ளுதல், நயத்தல் என்பவற்றோடு இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும் வளர்க்கும் நோக்குடன் இசை, நடன நாடகங்களும் தமிழ்மொழித் தினப் போட்டிகளாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளமை மிகவும் பொருத்தமானதாகும்.

ஒவ்வோராண்டும், தமிழ்மொழித் தினவிழா முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் ஞாபகார்த்த நாளில் கொண்டாடப்படுவது பாராட்டத்தக்கதாகும்.

I consider it a privilege to associate myself with the all Island Schools Tamil Day Celebrations to be held in Colombo on the 19th of July. It is a significant fact that this Day coincides with the remembrance day of the Sri Lankan Tamil Scholar Swami Vipulananda.

It was my good fortune to witness the Tamil Day Celebrations in 1992 at Kandy. The standard of the finalists whether it be Elocution, Drama, Dance and Music, reached, not, inter-collegiate standards but national levels. The audience easily mistook the performances as those coming from professionals.

Another memorable feature of the celebrations was the great understanding & relationship between children of all communities. I pray that the adults will, sustained by the example of children, promote peace between all communities which this country deserves.

I wish the Celebrations all success and look forward to participate at the All Island Schools Tamil Day Celebrations.

**R. I. T. Alles,**
State Secretary for Education.

# நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| பி.ப. 2.45 | m மங்கள இசை : குமரகுரு கோஷ்டி.<br>m மங்கள விளக்கேற்றல் : சிறப்பு அதிதிகள்.<br>m தமிழ்த்தாய் வாழ்த்து : பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி.<br>m 3ஆம் பிரிவு முதலிடம் பெற்ற தனிநடனம்<br>m முஸ்லிம் நிகழ்ச்சி.<br>m திறந்த போட்டி முதலாம் இடம்பெற்ற இலக்கிய நாடகம்<br>m மூன்றாம் பிரிவில் முதலாம் இடம்பெற்ற குழு நடனம். |
| பி.ப. 5.15 | **இடைவேளை.** |
| 5.30 | m முதலாம் இடம்பெற்ற சிங்கள மாணவரின் தமிழ்ப் பேச்சு.<br>m 4ஆம் பிரிவில் முதலிடம் பெற்ற தனி நடனம்.<br>m திறந்த போட்டியில் முதலாம் இடம்பெற்ற நாட்டிய நாடகம். |
| 6.10 | தலைமையுரை: மாண்புமிகு கல்வி இராஜாங்க அமைச்சர்,<br>**திருமதி. இராஜமனோகரி புலந்திரன்.** |
| 6.20 | உரை: **மாண்புமிகு ஏ.சி.எஸ். ஹமீத்,**<br>நீதி, உயர்கல்வி அமைச்சர். |
| 6.35 | உரை: **மாண்புமிகு சௌமிய மூர்த்தி தொண்டமான்,**<br>சுற்றுலாத்துறை, கிராமியக் கைத்தொழிற்றுறை அமைச்சர் |
| 6.50 | பிரதம விருந்தினர் **மாண்புமிகு பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்ஹ**<br>அவர்களின் பேருரையும், பதக்கம், சான்றிதழ் வழங்கலும். |
| | நன்றியுரை: **வெ. சபாநாயகம்,**<br>பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம், (தமிழ்)<br>கல்வி, உயர்கல்வி அமைச்சு. |
| | **தேசிய கீதம்:** இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை. |
| நிகழ்ச்சி அறிவிப்பாளர்: | ஜீ. போல் அன்ரனி அதிபரும்,<br>பகுதி நேர இலங்கை ஒலிபரப்புக்<br>கூட்டுத்தாபன அறிவிப்பாளரும்.<br><br>ஜி. ஜே. அபெயரத்தின ஆசிரியரும்<br>பகுதி நேர அறிவிப்பாளரும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம். |

The Meihandan Press Limited

## සමස්ත ලංකා දෙමළ භාෂා දිනය – 1993 . 07 . 19
## වැඩ සටහන

| | | |
|---|---|---|
| ප.ව. 02 . 45 | – | මංගල ඉසෙයි<br>කුමරගුරු කණ්ඩායම. |
| ප.ව. 03 . 30 | – | පොල් තෙල් පහන දැල්වීම<br>විශේෂ ආරාධිත අමුත්තන් විසිනි. |
| | – | දෙමළ භාෂා ගීතය.<br>බම්බලපිටිය රාමනාදන් බාලිකා විදුහලේ ශිෂ්‍යාවන් විසිනි. |
| | – | 3 වන කණ්ඩායමේ ඒකල නැටුම.<br>1 වන ස්ථානය දිනාගත් ඒකල නැටුම. |
| | – | මුස්ලිම් ඉසච්ච |
| | – | විවෘත තරගයේ 1 වන ස්ථානය දිනාගත්<br>සාහිත්‍ය නාට්‍යය |
| | – | 1 වන ස්ථානය දිනාගත් 3 වන කණ්ඩායමේ<br>කණ්ඩායම් නැටුම. |
| ප.ව. 05 . 15 | – | **විවේක කාලය** |
| ප.ව. 05 . 30 | – | 1 වන ස්ථානය දිනාගත් සිංහල ශිෂ්‍යාගේ<br>දෙමළ භාෂා කථාව |
| | – | 4 වන කණ්ඩායමේ 1 වන ස්ථානය දිනාගත්<br>ඒකල නැටුම. |
| | – | විවෘත තරගයේ 1 වන ස්ථානය දිනාගත්<br>නාට්‍ය නැටුම. |
| ප.ව. 06 . 10 | – | **මූලසුනේ දෙසුම**<br>ගරු අධ්‍යාපන රාජ්‍ය ඇමැතිනී<br>ආර්. එම්. පුලේන්ද්‍රන් මැතිතුමිය. |
| ප.ව. 06 . 20 | – | ගරු අධිකරණ හා උසස් අධ්‍යාපන අමාත්‍ය<br>ඒ. සී. එස්. හමීඩ් මැතිතුමාගේ දේශනය. |
| ප.ව. 06 . 35 | – | ගරු සංචාරක හා ග්‍රාමීය කර්මාන්ත අමාත්‍ය<br>එස්. තොන්ඩමාන් මැතිතුමාගේ දේශනය. |
| ප.ව. 06 . 50 | – | ගරු අග්‍රාමාත්‍ය රනිල් වික්‍රමසිංහ මැතිතුමාගේ දේශනය හා<br>ත්‍යාග, පදක්කම් හා සහතික පත්‍ර ප්‍රදානය කිරීම. |
| | – | **ස්තුති කථාව**<br>නියෝජ්‍ය අධ්‍යාපන අධ්‍යක්ෂ ජනරාල්<br>වී. සභානායගම් මහතා. |
| | – | **ජාතික ගීය**<br>වැල්ලවත්ත හින්දු බාලිකා විදුහලේ ශිෂ්‍යාවන් විසිනි. |

**නිවේදකවරු –**
ජී. පෝල් ඇන්තනී මහතා
විද්‍යාලයාධිපති හා ශ්‍රී ලංකා ගුවන් විදුලි සංස්ථාවේ
සහන නිවේදක.

ජී. ජේ. අබේරත්න මහතා
පාඨශාලාචාර්ය හා ශ්‍රී ලංකා ගුවන් විදුලි සංස්ථාවේ
සහන නිවේදක.

# கல்வி உயர்கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம் வெற்றிவேலு சபாநாயகம் கூறுகிறார். . .

'தமிழுக்கும் அமுதென்று பேர் – அந்தத் தமிழ் இன்பத்தமிழ் – எங்கள் உயிருக்கு நேர்' – என்று பாடினான் புரட்சிக் கவிஞன் பாரதிதாசன். அமுதுதினும் இனிய தமிழ் மொழிக்கு ஆண்டு தோறும் எடுக்கும் இனிய விழா இன்றும் கொண்டாடப்படுவதையிட்டுப் பேருவகை அடைகின்றேன். எமது பாடசாலை மாணவர்கள் தமது தாய்மொழி மூலமான பல்வேறு ஆளுமைகளை வெளிக்கொணரச் சந்தர்ப்பம் கொடுத்து, இலைமறை காயாக அவர்களிடம் கொழுந்துவிட்டெரியும் ஆற்றல்களைத் தூண்டி விடுவதற்கு இதுபோன்ற போட்டிகளும், விழாக்களும் வழிவகுக்கும். அதேவேளை அவர்கள் தம் தாய்மொழி மீது கொண்ட அறிவும் மேம்படும். அந்த வகையில் எமது கல்வியமைச்சின் தமிழ் மொழிப்பிரிவு மூன்றாவது தமிழ் மொழித்தினவிழாவைக் கொண்டாடுகின்ற அதேவேளையில் நான்காவது சிறப்பு மலரையும் வெளிக்கொணர்வதில் பெருமகிழ்வடைகிறேன்.

இவ்விழாவை மாகாண நிலையில் நடாத்தி எமக்குப் பெறுபேறுகளைத் தந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர்கட்கும், மாகாண விழாப் பொறுப்பதிகாரிகளுக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள் உரித்தாகுக. விழாவினைச் சிறப்பாக நடாத்தி, தமிழ் மொழியின் தொன்மையும் பெருமையும் விழா மூலம் எடுத்துக்காட்டப்பட வேண்டுமென்று எனக்குப் பணிப்புரையும், ஆலோசனையும் வழங்கிய கல்வி இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திருமதி. இராஜமனோகரி புலந்திரன் அவர்கட்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றியறிதலை எடுத்துக் கூற விரும்புகின்றேன். விழாவினைச் சிறப்பாக நடாத்த, சகல துறைகளிலும் எனக்கு ஒத்துழைப்பு நல்கிய கல்வி, உயர்கல்வி அமைச்சின் கீழ் உள்ளசகல திணைக்களங்களிலும் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கும், மேல் மாகாணக் கல்வித் திணைக்களத்திற் கடமையாற்றும் தமிழ் பேசும் சகல உத்தியோகத்தர்கட்கும், உதவியளித்த பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்கட்கும், விழா, போட்டி நடாத்த உதவி புரிந்த நடுவர்களுக்கும், மாணவர்களுக்கும், உணவு அளித்த சகல நிறுவனங்களுக்கும், பெரியோர்களுக்கும் மண்டபத்தை இலவசமாக வழங்கிய புதிய கதிரேசன் தர்மகர்த்தா சபையினருக்கும், இம்மலருக்கு விளம்பரங்களைத தந்துதவியவர்கட்கும், உரிய காலத்தில் இம்மலரை அழகுற அச்சிட்டுதவிய மெய்கண்டான் அச்சக உரிமையாளர்கட்கும், மற்றும் பல்வேறு துறைகளிலும் விழாவிற்கு உதவியளித்த சகல தமிழ் அபிமானிகளுக்கும், காவற்றுறையினருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளை இங்கு கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வழமைபோல இந்த விழா முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தரது நினைவு தினத்தில் நடைபெறுகிறது. இம்மரபு தொடர்ந்தும் பேணப்படும். இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் தமிழியல் வரலாற்றில் தனித்துவமான ஆளுமையாகத் திகழ்ந்தவர் அடிகளார். அவரது நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்கள்நிறைவுபெற்று விட்டன. எனினும் சுவாமிகளது நினைவு தினம் அகில இலங்கைத் தமிழ் மொழித் தினவிழாவாக ஆண்டுதோறும் நூற்றாண்டு விழாக் காண வேண்டுமென்பதே எமது மறைந்த அதியுத்தம ஜனாதிபதி அமரர் ரணசிங்க பிரேமதாசா அவர்களுடைய பெருவிருப்பமாகும். அவரது விருப்பினை நிறைவேற்றும் வகையில் எமது நாட்டின் ஜனாதிபதி மேன்மைதங்கிய டி. பி. விஜயதுங்க அவர்களின் தலைமையினாலான இலங்கை அரசின் மாண்புமிகு பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இவ்விழாவைத் தலைமை தாங்கிக் கௌரவிக்கின்றார்கள். அவர்களுக்கு எமது நன்றிகள். மேலும் இவ்விழாவில் கலந்து கொள்ளும் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதிநகரபிதா ஆகியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். எமது மாணவர்கள் இவ்விழாவில் மொழித் திறன்களூடாகத் தமது பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணி வாழ்வாங்கு வாழ எனது நல்லாசிகள் உரித்தாகுக.

**வெ. சபாநாயகம்.**

*With the best Compliments*

*of*

*

*

*

*

*

*

*

*

**KOMATHY VILAS**

**142, Sea Street,**

**Colombo 11.**

# மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளரின் ஆசிச் செய்தி

இவ்வாண்டு அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகளும், தமிழ் விழாவும் மேல் மாகாணத்திலே நடைபெறுவதையிட்டு மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையிற் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழ் மொழி தொன்று தொட்டு இயல், இசை, நாடகம் ஆகிய முத்துறைகளிலும் சிறப்புற்று வந்துள்ளது. இப் பாரம்பரிய வளர்ச்சியைத் தொடர்ந்து பேணும் வகையில் எமது அரசாங்கம் தமிழ் மொழித் தினப் போட்டிகளைப் பாடசாலை, கோட்டம், மாகாணம், அகில இலங்கை நிலைகளில் சிறப்புற நடத்தி வருகின்றது. இவ்வாண்டும் முன்னைய ஆண்டுகளிலும் பார்க்க கல்வியியல் நோக்கில் மாணவர்களின் அடிப்படை மொழித் திறன்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் விருத்தி செய்யும் தலையாய நோக்குடன் கல்விப் பணிப்பாளர்களும், கல்வியியலாளர்களும், ஆசிரியர்களும் இணைந்து முயன்று வருவதையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கையிலே சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு தேசிய மொழிகளே உள்ளன. இந்த இரண்டு மொழிகளும் ஒரே மொழி, பண்பாட்டு மூலங்களைக் கொண்டவை என்பது மொழியியலாளர் அறிந்து கொண்ட உண்மையாகும்.

இவ்வாண்டு தமிழ் மொழி கற்கும் சிங்கள மாணவர்களும் இத்தமிழ் மொழித் தினப் போட்டிகளில் கலந்து தமது சகோதர மொழி ஆற்றல்களை வெளிப்படுத்த வாய்ப்பு வழங்கியமை சிறப்பானதொரு விடயமாகும்.

மேல் மாகாணத்திலே நடைபெறுகின்ற அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகள் சிறப்புற நடைபெறுதவற்காக மேல் மாகாணக் கல்வித் திணைக்களம் அவசியமான சகல பணிகளையும் ஆற்றி உதவுமென உறுதியளிக்கின்றேன்.

தமிழ் மொழி கற்பிக்கின்ற ஆசிரியர்கள் கல்வி விருத்திக்கு அவசியமான தமிழ் மொழித்திறன்கள் யாவையும் வெளிக் கொணர்ந்து வளர்க்கும் பணியில் தொடர்ந்து தமது கடமைகளை செவ்வனே செய்வார்கள் என்பதிலே எனக்கு நம்பிக்கை உண்டு.

இவ்வாண்டு நடைபெறும் தமிழ் மொழித் தினப் போட்டிப் பெறுபேறுகளை மீளாய்வு செய்து இனிவரும் ஆண்டுகளிலே குறைகளை நிவர்த்தி செய்து மேலும் உயர் நிலையில் இப் போட்டிகளை நடாத்த வேண்டுமெனச் சகல தமிழ் மொழி ஆசிரியர்களிடமும் கேட்டுக் கொள்கிறேன்.

மேல் மாகணத்திலே நடைபெறுகின்ற அகில இலங்கைத் தமிழ் மொழித்தினப் போட்டிகளும் தமிழ் மொழி விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற மனமார வாழ்த்துகிறேன்.

**எச். எம். சிறிசேன**
மேல் மாகாணக் கல்விப் பணிப்பாளர்

தமிழ் மொழித்தினத்திற்கு எமது நல்வாழ்த்துக்கள்

k
k
k
k
k
k
k

மாணவ மாணவிகளுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

K
K
K
K
K

"மனிதருக்குள் மறைந்து கிடக்கும்
பூரணத்துவத்தை வெளிக் கொணர்வதே
கல்வி"


**கே. கந்தசாமி**
இல. 03, பிரதான வீதி
குருனாகல்.

## விழாமலர்க் குழு

1. திரு. வெ. சபாநாயகம் — பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம். கல்வி, உயர்கல்வி அமைச்சு.
2. திரு. க. இ. ஆறுமுகம் — உதவிக்கல்விப்பணிப்பாளர். கல்வி, உயர்கல்வி அமைச்சு.
3. திரு. ஜீ. பீ. அல்பிறெட் — உதவிக்கல்விப் பணிப்பாளர். கல்வி, உயர்கல்வி அமைச்சு.
4. திரு. சோ. குகானந்தசர்மா — கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

## மேன்முறையீட்டுக் குழு

1. ஜனாப். எம். எம். ஏ. குத்தூஸ் — கல்விப்பணிப்பாளர், முஸ்லீம்பாடசாலைகள் பிரிவு, கல்வி, உயர்கல்வி அமைச்சு.
2. திரு. சோ. சந்திரசேகரம் — சிரேஷ்ட விரிவுரையாளர், கல்வித்துறை கொழும்புப் பல்கலைக் கழகம்
3. திரு. செ. அழகரெத்தினம் — பீடாதிபதி, கல்வியியல் கல்லூரி, வவுனியா.

## மாகாண இணைப்புக் குழு

1. திரு. எஸ். நல்லையா — பிரதிக்கல்விப்பணிப்பாளர், மேல்மாகாணம்.
2. திரு. எஸ். கமலநாதன் — மேலதிக கல்விப்பணிப்பாளர், வடக்குக்கிழக்கு மாகாணம்.
3. ஜனாப். பீ. ஹபீப் — பிரதிக்கல்விப்பணிப்பாளர், வடமத்திய மாகாணம்.
4. திரு. எம். வை. எம். முஸ்லீம் — பிரதிக்கல்விப்பணிப்பாளர், மத்தியமாகாணம்.
5. திரு. கே. இராமநாதன் — உதவிக்கல்விப்பணிப்பாளர், ஊவாமாகாணம்
6. திரு. என். செல்வராஜ் — உதவிக்கல்விப்பணிப்பாளர், சப்பிரகமுவா மாகாணம்.
7. ஜனாப். எம். ஆர். எம். மிஹினார் — பிரதிக்கல்விப்பணிப்பாளர், சப்பிரகமுவா மாகாணம்.
8. ஜனாப். எம். எஸ். எம். ஹுசைன் — உதவி கல்விப்பணிப்பாளர், தென்மாகாணம்.
9. ஜனாப். அல்ஹாஜ் எஸ்.எல்.எம்.சானூன் — பிரதிக்கல்விப்பணிப்பாளர், வடமேல் மாகாணம்.

## வரவேற்புக்குழு

1. திரு. ஆர். சிவசிதம்பரம் — கல்விப்பணிப்பாளர், பீ. எஸ். ஈ. டீ. பீ. சீடா செயற்திட்டம், கல்வியமைச்சு.
2. ஜனாப். எம். ஏ. ஒமர்லெப்பை — பிரதிக்கல்விப்பணிப்பாளர், கல்வியமைச்சு.
4. ஜனாப். ஐ. எம். தாஹா — பிரதிக்கல்விப்பணிப்பாளர், இரத்மலானை.
5. ஜனாப். ஏ. எம். எம். சம்சுதீன் — பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
6. ஜனாப். எஸ் ஏ. வீ எம். இஸாது — பிரதிக்கல்விப்பணிப்பாளர், நீர்கொழும்பு.
7. திரு. பா. சி. சர்மா — அதிபர், பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி.
8. திருமதி. ஆர். சிவகுருநாதன் — அதிபர், பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி.
9. திருமதி கே. ஏ. கபூர் — அதிபர், பம்பலப்பிட்டி முஸ்லீம் மகளிர்கல்லூரி.
10. திருமதி. எஸ். சிவகுமார் — அதிபர், தெமட்டக்கொடை விபுலானந்தர் வித்தியாலயம்.
12. ஜனாப். எஸ். எல். லாபீர் — அதிபர், தாருஸ்ஸலாம் முஸ்லீம் வித்தியாலயம்.

## உபசரணைக்குழு

1. திருமதி. எல். கணேசன் — பிரதிஅதிபர், பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி.
2. திருமதி. ஜீ. யோகேஸ்வரன் — ஆசிரியை, இராமநாதன் மகளிர் கல்லூரி.
3. திருமதி. கே. சிறீஸ்கந்தராசா — ஆசிரியை இராமநாதன் மகளிர் கல்லூரி.
4. திருமதி. ஏ. என். ஜோசப் — ஆசிரியை இராமநாதன் மகளிர் கல்லூரி.
5. திருமதி. சியாமளா — பம்பலப்பிட்டி முஸ்லீம் மகளிர்கல்லூரி.
6. திருமதி. இந்துமதி கதிர்காமத்தம்பி — பம்பலப்பிட்டி முஸ்லீம் மகளிர் கல்லூரி.
7. திருமதி. கெஸீலா நாஸீக் — பம்பலப்பிட்டி முஸ்லீம் மகளிர் கல்லூரி.

## உணவு விநியோகம், போக்குவரத்துக்குழு.

1. திரு. முத்துசிவஞானம் — உதவிக்கல்விப்பணிப்பாளர், சீடாத்திட்டம். கல்வி, உயர்கல்வி அமைச்சு.
2. திரு. எல். திருச்செல்வம் — அதிபர், இரத்மலானை இந்துக்கல்லூரி.
3. திரு. எம். வெங்கடாசலம் — சீடாத்திட்டம், கல்வி, உயர்கல்வி அமைச்சு.
4. திரு. இ. சிவநாதன் — அதிபர், முகத்துவாரம் இந்துக்கல்லூரி.
5. திருமதி. கமர்டீன் — ஆசிரியை, அல்அமீன் வித்தியாலயம்.
6. ஜனாப். எம். எம். இப்ராஹிம் — ஆசிரியை, இசிப்பத்தான மஹா வித்தியாலயம்.
7. ஜனாப். ஏ. டபிள்யூ. அமானுல்லா — பிரதி அதிபர், அல்அக்ஸா வித்தியாலயம்.

## விழா ஒழுங்குக்குழு

1. திரு. க. இ. ஆறுமுகம் — உதவிகல்விப்பணிப்பாளர், கல்வி, உயர்கல்வி அமைச்சு.
2. ஜனாப். எம். யூ. எம். சனூஸ் — உதவிக்கல்விப்பணிப்பாளர் மேல்மாகாணம்.
3. ஜனாப். பி. எம். எச். எ. ஹம்ஸா — உதவிக்கல்விப்பணிப்பாளர் முகாமைத்துவப்பயிற்சிப்பிரிவு.
4. திரு. யோ. பெனடிற்பாலன் — பிரதிக்கல்விப்பணிப்பாளர், ஹெறாரணை.
5. திரு. ஏ. தில்லைநாதன் — அதிபர், கொ/கணபதி வித்தியாலயம்.
6. திருமதி. அக்ரம் — அதிபர், கொ/பிரத்திமா மகளிர் வித்தியாலயம்.
7. திரு. எஸ். பாலச்சந்திரன் — அதிபர், கொ/புளூமெண்டல் தமிழ் வித்தியாலயம்.
8. செல்வி. சுலோசனாபொன்னுத்துரை — ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி.
9. செல்வி, கௌரிதேவி இராசையா — ஆசிரியை, அல்ஹுசைனியா மஹாவித்தியாலயம்.

## போட்டி ஒழுங்குக்குழு.

1. திரு. கு. சோமசுந்தரம் — உதவிக்கல்விப்பணிப்பாளர் நாயகம், (தமிழ்) தேசிய கல்விநிறுவகம்.
2. திரு. ஜீ. பீ. அல்பிறெட் — உதவிக்கல்விப்பணிப்பாளர், தமிழ் மொழிப்பிரிவு, கல்வி, உயர்கல்வி அமைச்சு.
3. திரு. என். சிதம்பரநாதன் — பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்.
4. திரு. பி. சுப்பிரமணியம் — பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்விநிறுவகம்.
5. திருமதி. எஸ். சிதம்பரநாதன் — பிரதமசெயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்விநிறுவகம்.

| | |
|---|---|
| 6. திரு. யு. நவரட்ணம் | செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம். |
| 7. திரு. பீ. செல்வராஜ் | செயற்றிட்ட அதிகாரி, தேசியக்கல்வி நிறுவகம். |
| 8. ஜனாப். எம். பீ. எம். ஷப்ளி | செயற்றிட்ட அதிகாரி, தேசியக்கல்வி நிறுவகம். |
| 9. ஜனாப். எம். எஸ். ஏ. றஹீம் | செயற்றிட்ட அதிகாரி, தேசியக்கல்வி நிறுவகம். |
| 10. திருமதி. எஸ். எம். காசீம் | செயற்றிட்ட அதிகாரி, தேசியக்கல்வி நிறுவகம். |
| 11. செல்வி. எஸ். தேவராணி | செயற்றிட்ட அதிகாரி, தேசியக்கல்வி நிறுவகம். |
| 12. செல்வி. பீ. நாகலிங்கம் | செயற்றிட்ட மஅதிகாரி, தேசியக்கல்வி நிறுவகம். |
| 13. திரு. டபிள்யு. சூரியகுமார் | திட்ட உதவியாளர். தேசியக் கல்வி நிறுவகம். |

## நலன்புரிக்குழு

| | |
|---|---|
| 1. திரு. ஏ. தங்கராசா | பிரதிக்கல்விப்பணிப்பாளர், தமிழ் மொழிப்பிரிவு, கல்வி, உயர்கல்வி அமைச்சு. |
| 2. ஜனாப். ஏ. ஆர். ஏ. ஜலீல் ஹாஹியார் | பிரதிக்கல்விப்பணிப்பாளர், கல்வி, உயர்கல்வி அமைச்சு. |
| 3. திருமதி. ஆர். செல்வரத்தினம் | ஆசிரியை, கல்வி, உயர்கல்வி அமைச்சு. |
| 4. திரு. எஸ். மன்மதராஜன் | பிரதி அதிபர், இரத்மலானை இந்துககல்லூரி. |
| 5. திருமதி. கே. மன்மதராஜன் | ஆசிரியை, தெஹிவிளை அமிழ்வித்தியாலயம். |
| 6. திருமதி. என். குக் | ஆசிரியை சி/அல் ஹஜ்ரா முஸ்லிம் வித்தியாலயம் |
| 7. திருமதி. எஸ். கனகரெத்தினம் | கல்வி, உயர்கல்வி அமைச்சு. |
| 8. திருமதி. பீ. கணேஸராஜா | இராமநாதன் மகளிர் கல்லூரி. |
| 9. திரு. எஸ். உதயச்சந்திரன் | ஆசிரியர், விவேகானந்தா மகாவித்தியாலயம் |
| 10. திரு. சிறிதரன் | ஆசிரியர்/இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி.. |

# உணவு வழங்கும் பெரியார்களும் நிறுவனங்களும்

| | | | |
|---|---|---|---|
| (1) | உயர்திரு. க. கணேசலிங்கம் | - | பிரதிநகரமுதல்வர், கொழும்பு |
| (2) | திரு. திருமதி. சி. இராசதுரை | - | 11/1, 55ம் ஒழுங்கை கொழும்பு-06 |
| (3) | இராமநாதன் மகளிர்கல்லூரி | - | அபிவிருத்திச்சபை |
| (4) | பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி | - | அபிவிருத்திச்சபை |
| (5) | முஸ்லிம் மகளிர் கல்லூரி | - | அபிவிருத்திச்சபை |
| (6) | கொட்டாஞ்சேனை கன்னியர்மடத் தமிழ் வித்தியாலயம் | - | அபிவிருத்திச்சபை |
| (7) | விவேகானந்த மகாவித்தியாலயம் | - | அபிவிருத்திச்சபை |
| (8) | முகத்துவாரம் இந்துக்கல்லூரி | - | அபிவிருத்திச்சபை |
| (9) | அல்ஹித்தையாய முஸ்லீம் ம. வி. | - | அபிவிருத்திச்சபை |
| (10) | உப்புக்குளம் தமிழ் ம. வி. | - | அபிவிருத்திச்சபை |
| (11) | புனித, அந்தோனியார் ம. வி. | - | அபிவிருத்திச்சபை, கொழும்பு -13. |
| (12) | புனித, அன்னம்மாள் மகளிர் ம. வி. | - | அபிவிருத்திச்சபை, கொழும்பு -13 |
| (13) | கைறியா முஸ்லிம் ம. வி. | - | கொழும்பு -10. |
| (14) | பாத்திமா முஸ்லிம் மகளிர் வித்தி. | - | கொழும்பு -12 |
| (15) | சிட்டி ஏஜன்சி நிறுவனம் | - | 399 1/5, சிறி சங்கராஜ மாவத்தை, கொழும்பு -12. |

---

*தங்கப்பதக்கங்கள் வழங்கியவர்கள் :*

**காரையம்பதி அமரர் வித்துவான் மு. சபாரத்தினம் அவர்கள்**

***ஞாபகார்த்தமாக அன்னாரின் பிள்ளைகள் உவந்தளித்த தங்கப்பதக்கங்கள் விழாவில் வழங்கப்படுகின்றன.***

**வத்துளைப் பிறின்டர்ஸ்**
**வத்துளை**

---

**யு. என். எஸ். கோ. (யுனெஸ்கோ)**
**ஸ்தாபனத்தாரின் இலங்கைக் கிளையின்**
*தமிழ்ப் படைப்புக்கள் :*
கடைசிப் பயணச்சீட்டும் வேறு கதைகளும்,
கூரியர் சஞ்சிகைகள்.

*1993 ஆம் ஆண்டின் தமிழ் மொழித்தினவிழா*
*பெரு நிறைவு பெற வாழ்த்துகிறேன்.*

m
m
m
m
m
m
m
m
m
m
m
m
m
m
m
m
m
m


## *அல்ஹாஜ் எஸ். எல். எம். சனூன்*

**பிரதிக் கல்விப்பணிப்பாளர்**
**வடமேல் மாகாணக்கல்விப் பணிமனை**
**குருநாகல்.**

# மொழி கற்பித்தலின் இரு பிரதான இலக்குகள்.

தொடர்பாடல் ஊடகங்களுள் மிகவும் முக்கிய சாதனமாக விளங்குவது மொழி. தொடர்பாடல் மூலமே சமூக உணர்ச்சியும், சமூக உறவும் வளர்கின்றன. மொழியின் அடிப்படையிலேயே இனரீதியான சமூகம் ஒன்று உருவாகின்றது. இவை இரண்டிற்குமிடையே உள்ள பிணைப்பினை மொழி கற்பிக்கும் ஆசிரியர் தமக்குச் சாதகமாக்கிக் கொள்வாரானால் கற்பித்தல் இலகுவாக அமையும். இயல்பான சூழலுடன் மாணவர் ஒன்றித்து கற்றலை மேற்கொள்வர். வகுப்பறைத் தொடர்பாடலில் மொழியின் பங்கே மிக அதிகமானது. அதற்கு அனுசரணையாகவே அங்க அசைவுகளும், சைகைகளும் அமைந்துள்ளன. மொழி கற்பிக்கும் ஆசிரியர் தமது முற்றுமுழுதான குறிக்கோளாக பேச்சு, கேட்டல், எழுத்து வாசிப்பு ஆகிய வெளிப்படையான ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். எமது பாடநூல்கள் கூட அத்தகைய செயற்பாட்டினையே நிலைநிறுத்த முயல்கின்றன. இதனால் எத்தகைய கற்றல் விளைவுகள் அல்லது நடத்தை மாற்றங்கள் மாணவர்களிடத்தே பிரதிபலிக்கின்றன என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கும் தன்மை குறைவாகவே காணப்படுகின்றது.

வெறும் ஆற்றல்களை மாத்திரம் மாணவர்கள் பெறுதல் என்பதையும், பெற்ற ஆற்றல்களைப் பிரயோகித்தல் என்பதையும் உற்று நோக்கும் போது, ஆற்றல் பெறும் வழிவகைகளை வகுப்பறைச் சூழலுக்குள் மாத்திரமே ஆசிரியர் மட்டுப்படுத்தி விடுவாரானால், வகுப்பறைக்கு வெளியே அவ்வாற்றல்களைப் பிரயோகிக்கும்போது தோற்றம் அளிக்கும் நிகழ்வுகளுக்குக் கச்சிதமாக முகங்கொடுக்கும் வல்லமை அற்றவராக மாணவர் உருவாகலாம். ஆகவே, கற்பித்தல் உண்மைச் சூழலில் அமைந்த சமூக நடைமுறைகளோடு இணைந்து செல்லும் ஒரு செயற்பாடாக அமையுமேயானால் கற்றல் இயல்பாகவே நிகழும்.

மொழி ஆற்றல்கள் பிரயோகிக்கப்படும் பொழுதுதான் மாணவருடைய நடத்தை மாற்றம் (கற்றல் விளைவு, பெறுபேறு) இனங்காணக் கூடியதாக வெளிப்படுகின்றது. மொழி ஆற்றலுடன் இணைந்த இரு பெறுபேறுகள் பற்றி ஈண்டு குறிப்பிடுவது பொருத்தமாகும். ஒன்று, திருத்தமான பிழையற்ற பிரயோகம். (Accuracy) மற்றது இடர்பாடு எதுவுமில்லாத இலாவகமான மொழியாட்சி (Fluency) பேசுதல், கேட்டல், எழுதுதல், வாசித்தல் ஆகிய மொழித்திறன்களூடாக மாணவர் மொழியினைச் செம்மையாக, திருத்தமாகப் பிழையின்றிப் பிரயோகிக்கும் ஆற்றலையும், சரளமாகக் கையாளும் வல்லமையினையும் பெற்றுக் கொள்வர். இவ்விரு கற்றல் விளைவுகளும் மாணவரைச் சென்றடைவதைக் குறிக்கோளாகக் கொண்டே மொழி கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெறுதல் பொருத்தமானதாகும்.

மொழியில் திருத்தமான உபயோகம், சரளமான பிரயோகம் என்பவற்றை உளவியல் அடிப்படையிலோ, மொழியியல் அடிப்படையிலோ பகுத்து நோக்குவது கஷ்டமாகும். ஆயினும், இவ்விரு பண்புகளையும் சமமாக வளர்த்தெடுப்பதற்கும், ஆசிரியர்களது கற்பித்தற் பணியினைத் திட்டமிடுவதற்கும் உதவியாகவே இவை இரு கூறுகளாக வகுத்து நோக்கப்படுகின்றனவென்பதை நாம் கருத்திற் கொள்ளல் வேண்டும்.

திருத்தமான அல்லது பிழையற்ற மொழிப்பிரயோகம் என்பதற்கு அழுத்தம் கொடுக்கும் போது, சரளமான மொழிப்பிரயோகம் என்பது சில வேளைகளில் சமநிலைத் தன்மையை இழந்து விடுகின்றது. மொழி கற்பித்தலில் “சரியான மொழிப்பிரயோகம்” என்ற இலக்கினை அடைவதற்கு எழுத்து, சொல், சொற்றொடர் என்பவற்றின் அடிப்படையிற் சிந்தனையைச் செலுத்தலாம். ஒலியன்களின் வரிவடிவமே எழுத்தாகும். ஒலியின் திருத்தமான உச்சரிப்பிலும், சொல், சொற்றொடர் அமைப்புகளின் செம்மையிலும் அதிக கவனம் செலுத்தப்படும் போது, அதற்கு இலக்கண அமைப்பைச் சட்டமாக ஆக்கிக் கொள்ளுவதே மரபுரீதியான கற்பித்தலாக இருந்து வருகிறது. மாணவரிடத்து இலக்கண வரம்புக்குட்பட்ட மொழியமைப்பினைத் திணிப்பதே நோக்கமாகக் கொண்டு நிகழும் மரபு ரீதியான கற்பித்தல் முறை, மாணவனது இயல்பான மொழிப்பிரயோகத்தில் இருந்தும் இலக்கணம் அமைக்கலாம் என்ற உண்மையினை மறுத்து வருகின்றது. இந்த நிலைமையினை மாற்றியமைத்து, மாணவனது நடைமுறை வாழ்க்கையோடு தொடர்புபட்ட இயல்பான மொழிப்பிரயோகம், வகுப்பறையில் கற்பிக்கப்படும் ஏனைய பாடங்களின் மொழிப் பிரயோகம் என்பனவற்றையெல்லாம் இணைத்து நடைமுறை இலக்கணமாகவும் (Functional Grammer) வகுப்பறை இலக்கணமாகவும் (Class Room Grammer) ஆக்கிக் கற்பித்தல் வேண்டும். இதன் மூலம் மாணவனும்,

ஏனைய பாட ஆசிரியர்களுங் கூட மொழித்திறன் அபிவிருத்தியில் "சரியான மொழிப் பிரயோகம்" என்னும் விடயத்தில் சமபங்காளிகளாகி விடுகின்றனர்.

மொழியினைச் "சரளமாகக் கையையாளுதல்" என்ற விடயம் குறிக்கோளாகக் கொள்ளப்படுதல் குறைவாகவே காணப்படுகின்றது. இலாவகமாக அல்லது சரளமாக மொழியினைக் கையாளுதல் என்னும் விடயத்தில் தொடர்ச்சி, பொருட்செறிவு, ஆக்கம் என்னும் அம்சங்கள் ஒழுங்குற அமைந்துள்ளன. சரளமான மொழிப்பிரயோகத்துக்கு இலக்கியப் பயிற்சியும் இன்றியமையாததாகும். இலக்கணப் பயிற்சி இல்லாதவர்களுங்கூட இலக்கியப் பயிற்சி பெற்றிருப்பதன் மூலம் வெகு இலாவகமாக மொழியினைக் கையாளுந்திறன் பெற்றுள்ளார்கள். எனவே மாணவர்களிடத்து இலக்கிய இரசனையைத் தூண்டி விடுவதன் மூலம் அவர்கள் மொழி வளத்தைத் தாமாகவே தேடிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவார்கள். வேண்டிய சந்தர்ப்பத்தில் வேண்டிய முறையில் இலாவகமாக மொழியினைக் கையாளுந் திறனையும் பெற்றுக் கொள்வார்கள். சரளமான நடை என்பது ஆற்றொழுக்குப்ப போன்று அமைகிறது. ஆற்றொழுக்குப் போன்ற நடை இலக்கியத்தில் உண்டு என்பதற்கு பின்வரும் கம்பரின் பாடல் ஒன்றினைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

'புவியினுக் கணியாய் ஆன்ற பொருள்தந்து புலத்திற்றாகி
அவியகத் துறைகள் தாங்கி ஐந்திணை நெறியளாவிச்
**சவியுறத் தெளிந்து தண்ணென் றொழுக்கமும் தழுவிச் சான்றோர்**
**கவியெனக்** கிடந்த கோதா வரியினை வீரர் கண்டார்'

செய்யுளை அலங்கரிக்கும் அணி வகைகள், ஓசை நயங்கள், சந்தங்கள், இரு பொருள் தரும் சிலேடைகள், திகைக்க வைக்கும் சொற்சிலம்பங்கள், எதுகை மோனைகள், அடுக்குத் தொடர்கள், தொகைநிலைத் தொடர்கள், பொருட் சிறப்புத் திரிசொற்கள் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் மாணவ மனநிலையில் கவர்ச்சியையும்,கிளர்ச்சியையும் உண்டு பண்ணி, இலக்கிய இரசனையைத் தூண்டிவிட மொழித்தேட்டம் அதிகரித்து, அதன் மூலம் சரள நடைக் கையாட்சி இயல்பாகவே அமைந்து விடுகின்றது. இலக்கியப் பயிற்சியோடு பத்திரிகைகள், சஞ்சிகைகளை வாசித்தல், தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தல், பாடசாலைகளில் பேச்சு, எழுத்து, விவாதம், நாடகம் போன்ற நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளல் போன்ற வாய்ப்புக்களிலும் மாணவர்கள் ஈடுபாடு கொள்ளச் செய்தல் வேண்டும். பேசுவதற்கு மாணவர்களுக்கு நிறையச் சந்தர்ப்பங்கள் அளிக்கபடுதல் நன்று. ஏனெனில் "செந்தமிழும் நாப்பழக்கம்" ஆகும்.

மொழிப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவர் இரு பெறுபேறுகளான மொழியில், **பிழையற்ற பிரயோகம், சரளமான உபோயகம்** என்பவற்றை அடைவதற்குக் கற்பித்தற்படி முறைகளான; விடயத்தைச் சமர்ப்பித்தல், விளக்குதல், மீளவலியுறுத்தல், கற்றலிடமாற்றத்துக்கு இடமளித்தல் ஆகியவற்றை மொழி கற்பித்தலில் திட்டமிட்டுக் கையாளுதல் வேண்டும். கற்றலிடமாற்றம் பல்வேறு சமூகப் பின்னணிகளிலும், ஏனைய பாடப் பரப்புகளிலும் பொருந்துவதாக அமைதல் வேண்டும். வெறும் பாட நூல்களுடனோ, கற்பனைச் சூழலுடனோ சிறைப்படுத்துவதற்கு முயற்சிக்காது, இயல்பான சூழலில் சுதந்திரமான சிந்தனைக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

மொழி கற்பிக்கப்படும் பொழுது முன் கூறிய இலக்குகளை பொது நோக்கங்களின் அடிப்படையில் மாத்திரம் அடைவதற்கு முயற்சிக்காது, சிறப்பு நோக்கங்களாகவும் கொண்டு கற்பித்து வருவோமேயானால் மாணவர் திருத்தமான சரளமான மொழிப்பிரயோகத்தில் மொழித் திறனுடையவர்களாகத் திகழ்வதோடு ஆக்கத் திறனுடையவர்களாகவும் விளங்குவார்கள் என்பது திண்ணம்.

இதுகாறும் மொழி கற்பித்தல் தொடர்பாக ஆராய்ந்தவற்றை அகில இலங்கை ரீதியில் தமிழ் மொழித்தின விழாவைக் கொண்டாடும் இக்கால கட்டத்தில் தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியரும் மாணவரும் கவனத்திற் கொள்ளல் நன்று.

**எம். ஏ. உமறு லெப்பை**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்
(ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை)
கல்வி, உயர்கல்வி அமைச்சு,
இசுறுபாய, பத்தரமுல்லை.

# தமிழ் மொழியில் நாப்பழக்கம்

உடுவை. எஸ். தில்லை நடராசா,
அரச அதிபர், வவுனியா

*"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்"*
என்பது பழமொழி

நாவன்மையைக் காட்டி மற்றையோர் கவனத்தையும், கருத்தையும் கவர வேண்டிய சந்தர்ப்பங்களைப் பலர் சந்தித்திருக்கக் கூடும்; நாவசைத்துக் காரியத்தைச் சாதித்த சம்பவங்களும் இருக்கக் கூடும். அப்போதெல்லாம் பேச்சுக்கலையை நன்கு பயிலவேண்டுமென்ற எண்ணம் எழுந்திருக்கலாம். ஒருவர் எப்படி நாவைப் பழக்கப்படுத்தி நன்மை பெறலாம் என்பதைச் சிறிது பார்ப்போம்.

பள்ளி வாழ்க்கைக்குப் பின் ஒருவர் தேடிக்கொள்ளும் தொழிலால் - அங்கத்துவராக உள்ளீர்த்துக் கொள்ளும் அமைப்புகள் தரும் பொறுப்புகளால் பெரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தாவிட்டாலும் - வரவேற்புரை, நன்றியுரை, தலைமையுரை ஆகியவற்றை ஆற்றவேண்டி ஏற்படலாம். அவற்றை ஆயத்தம் செய்யாவிட்டால் பேச்சில் சோர்வு தட்டி ஏற்பாட்டாளரிடம் குறைகேட்க நேரிடலாம். சில வேளைகளில் கேலிப்பேச்சுகளுக்கும் ஆளாகலாம். எனவே பேசுவதற்கு முன்பாகப் பேசப்போகும் விடயம் குறித்துச் சிறிதேனும் ஆயத்தஞ் செய்வது அவசியம்.

என்ன விடயத்தைப் பற்றிப் பேச வேண்டும் - எவ்வளவு நேரம் பேசுவதற்கு எடுத்துக் கொள்ளலாம் எப்படிப்பட்ட சபையோர் முன்னிலையில் உரையாற்ற வேண்டும் - உரைக்கு முன்பாக இடம் பெறக்கூடிய நிகழ்ச்சிகள் - உரையைத் தொடர்ந்து இடம் பெறும் நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் முடிந்த வரைக்கும் முன் கூட்டியே அறிந்து கொண்டால் சுவையான பேச்சைத் தயாரிப்பது எளிதாகவிருக்கும்.

பேசப்போகும் தலைப்பைச் சரியாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொண்ட பின் எடுத்துக் கொண்ட விடயம் தொடர்பான நூல்களை நுணுகி ஆராய்ந்து நுட்பமான தகவல்களைக் குறிப்புகளாக எடுத்துக் கொள்ளல் வேண்டும். புத்தி ஜீவிகள் முன்னிலையில் நிகழ்த்தும் உரையானால் சரியான புள்ளி விபரங்களையும் தேவையான தரவுகளையும் சேர்ப்பது அவசியம். அழுத்தம் கொடுக்க நினைக்கும் விடயங்களுக்கு அறிஞர்களினதும் மேதாவிகளினதும் மேற்கோள்களைச் சுட்டிக் காட்டுதல் மிக்க நன்று. சபையைத் தம் பால் திருப்ப எண்ணும்போது விடயத்திலிருந்து விலகிச் செல்லாது நகைச்சுவையைச் சேர்ப்பதும், உபகதைகளைச் சொல்வதும், இசையோடு பாடல்வரிகள் சிலவற்றை இசைப்பதும் பேச்சுக்கு நல்ல அலங்காரமாக அமையும்.

பேச்சாளராக வரவிரும்புவர் முடிந்தளவுக்கு மற்றவர்கள் பேசுவதைக் கேட்க வேண்டும். எழுத்துருவம் பெற்ற பேச்சுக்களை வாசிக்க வேண்டும். கேட்பதாலும் படிப்பதாலும் பேச்சுக்கள் அமைந்திருக்கும் ஒழுங்கையும் அழகையையும் உணர முடியும். பேசும் முறைகள் பலவற்றைக் கேட்ட பின்னர் பேசுவோர் தமக்கென ஒரு தனிப்பாணியை அமைத்துக்கொள்வது நல்லது. நல்ல கருத்துக்களை நினைவில் நிறுத்துவதோடு குரல் வளத்தையும் பண்படுத்திப் பழக்கப்படுத்திக் கொண்டால் சிறப்பான சொற்பொழிவுகளை நிகழ்த்தக் கூடியதாயிருக்கும்.

எவ்வளவு தான் சொல்லில் வல்லவனாக இருந்தாலும் ஆயத்தஞ் செய்யாவிடின் புதியதலைப்புகள் புதிய மேடைகள் என்பன தோல்வியைத்தரக்கூடும். சபையோருக்குச் சலிப்பு ஏற்பட்டால் பேச்சை முடிக்க வேண்டியோ அல்லது சுருக்க வேண்டியோ ஏற்படலாம். எனவே, எப்படி எடுத்து வளர்த்துச் சென்று முடிப்பது என்ற ஒழுங்கு முறையைச் சிந்தித்து வைப்பது நல்லது. பாடமாக்கிய பேச்சுகளும் சோடை போய் விடுவதால் பேச்சின் முக்கிய அம்சங்களைக் குறித்து வைத்துக் கொண்டு சபையையும் நேரத்தையும் கவனித்து எடுத்த குறிப்புகளை ஆதாரமாக வைத்துக் கொண்டு பேசுவது நல்லது. யாதொரு குறிப்பும் இல்லாவிட்டால் முன்னுக்குப் பின் முரணாகச் சொல்ல வேண்டியோ அல்லது ஒழுங்கு முறையின்றி எழுந்தமானக் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டியோ ஏற்படலாம். இன்னும் சிலவேளைகளில் பொய்த் தகவல்களையும் பொருத்தமில்லாதவற்றையும் சொல்லிவிடக்கூடும். ஆகவே ஒரு முழுமையான பேச்சைத் தயார் செய்வது எப்போதும் நல்லது. அனுபவமுதிர்ச்சி ஏற்படும் போது ஆயத்தம் எதுவுமின்றிப்

பேச்சுகளை நிகழ்த்துதல் கைகூடும். இருப்பினும் விடயத்தையொட்டியதாகக் குறிப்புகளை வரிசைக் கிரமத்தில் எழுதி வைத்திருப்பின் சந்தர்ப்பத்தைப் பொறுத்துப் பேச்சை நீட்டி நிகழ்த்தவோ அல்லது சுருக்கி முடிக்கவோ முடியும்.

அநேகமாக இப்போதெல்லாம் சிறியசபைக்கும் ஒலி வாங்கி இணைப்பு இருப்பதைக் காணக்கூடியதாயுள்ளது.

ஒலிவாங்கியின் தன்மையை அளவிட்டுத் தூரத்தைக் கணக்கிட்டு நிற்பதும் ஒலிவாங்கிக்கேற்றவகையில் உதடுகளை அசைப்பதும் குரலில் ஏற்ற இறக்கம் காட்டுவதும் பேச்சைச் சிறப்பிக்கும். எழுதிய பேச்சை வாசிக்கும் சந்தர்ப்பங்களில் உதடுகளுக்கும் ஒலிவாங்கிக்கும் இடையில் கடதாசிகள் அகப்பட்டு பேச்சின் தரத்தைக் குறைத்து விடாமலும் பார்த்துக் கொள்ளல் வேண்டும். மேடையில் நின்று உரையாற்றும் போது சபையை மறந்து மேடையிலிருப்போரை மட்டும் திரும்பித்திரும்பிப் பார்த்துப் பேசுவது அழகல்ல. ஒலி வாங்கி ஒத்துழைக்காவிட்டால் சபையோரின் சங்கடங்களையும் சந்திக்க வேண்டி ஏற்படலாம்.

நாடக பாணியிலோ அல்லது நடனமாடிக்கொண்டோ பேசுவதைக்கேட்க அநேகர் விரும்ப மாட்டார்கள். இயல்போடிணையாமல் கைகளை அசைத்துப் பேசுவதும், சபையிலிருக்கும் சிலரைச் சவாலுக்கு அழைக்கும் வகையில் கைகாட்டிப் பேசுவதும் – அழகில்லாவகையில் கண்களை உருட்டிப் பேசுவதும், அங்கங்களை அசைப்பதும் பேச்சை அலங்கரிப்பதற்குப் பதிலாக அலங்கோலத்தை ஏற்படுத்தும். சொல்லலங்காரம் செய்வதாக எண்ணி கருத்துக்களற்ற அடுக்கு வசனங்களை அமைத்துப் பேச்சுக்களைத் தயார் செய்வதும் நல்லதல்ல.

நீண்ட பேச்சானால் நாவறண்டு தாகம் ஏற்படலாம். அதற்காக அடிக்கடி பானமருந்திப் பேசுவதும் பார்ப்பவருக்கு வெறுப்பைத் தோற்றுவிக்கலாம். பேச்சை ஆரம்பிக்க முன்னரும் முடித்த பின்னரும் தாக சாந்தி செய்வது நல்லது. பேச்சினிடையே அடிக்கடி "அ..." இழுத்துச் சொல்லுதல், செருமுதல், – 'மன்னிக்கவேண்டும்' கோரிக்கை விடுத்தல் என்பவை நல்லபிப்பிராயத்தை ஏற்படுத்தாது. பேச்சு நிகழ்ச்சிகளின் போது பரிமாறப்படும் சிற்றுண்டி வாயினுள்ளே இருப்பின் பேச்சின் இயல்பை அவலட்சணமாக்கி விடும் என்பதையும் கருத்திற் கொள்ளல் நன்று.

பேச்சை நிகழ்த்துபவரின் முகத்தோற்றமும் தெளிவாக இருக்க வேண்டும். விகாரமாக வைத்துக்கொள்ளல், செயற்கைச்சிரிப்பை ஏற்படுத்துதல், – சபையைப்பார்க்காமல் எழுதிய பேச்சை வாசித்தல் ஆகியவற்றைப்பெரும் பாலானவர்கள் இரசிக்க மாட்டார்கள். சிறந்த முறையில் வெளிப்படுத்தும் ஆற்றலைப் பெற்றுக் கொள்ளாவிட்டால் நல்லகருத்துக்களை கேட்போருக்கு உட்செலுத்த முடியாமற் போய்விடும்.

பேசும்போது தோற்றமும் அசைவுகளும் எப்படியிருக்கும் என்பதை நிலைக்கண்ணாடிமுன் நின்று பேசிப்பழகுவதால், உணரக்கூடியதாக இருக்கும். 'ஆள்பாதி ஆடை பாதி' என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும். நேர்த்தியான ஆடைகள் பேச்சை நிகழ்த்துவோருக்கு அழகையும் மதிப்பையும் தரவல்லன. கண்ணாடிமுன் பேச்சை ஒத்திகை பார்ப்பதால் நம்மை நாமே திருத்திக்கொள்ளவும் முடியும்.

வசதியிருப்பின் பேச்சை வீடியோ ஒளிப்பதிவு அல்லது ஓடியோ ஒலிப்பதிவு செய்து திருப்பிப் பார்த்தும் கேட்டும் ஏற்ற மாற்றங்களைச் செய்வது நல்லது.

கூச்சமெதுவுமின்றிப் பேசிப் பழகவும் விடயஞானத்தைப்பெருக்கிக் கொள்ளவும் கல்லூரிகளில் இயங்கும் இலக்கியக் கழகங்கள்– மாணவர் தேர்ச்சிச் சங்கங்கள் போன்ற அமைப்புகளைப் பயன்படுத்தினால் நாப்பழக்கம் தானாகவே நன்றாய் அமையும்.

*'நல்லவன் நாவசைத்தால் நாடசையும்'*

# காலந்தோறும் தமிழ்

உலக மொழிகளுள்ளே தொன்மையானவை சிலவே. அவற்றையும் தன் கிளை மொழிகளால் வழக்கு இழந்தவை, கூடுதலான மக்கட்கூட்டத்தால் பிரயோகிக்கப் படாதவை, பண்டைய சிறப்புக்குன்றாமல் இன்றும் உயிர்த்துடிப்புடன் விளங்குபவை என வகைப்படுத்தலாம். தோன்றிய காலந்தொட்டு மனிதனுடைய பரிணாம வளர்ச்சி மாற்றங்களுக்கும் காலச் சூழ்நிலைகளுக்கும் தன்னையும் ஈடுகொடுத்துக் கொண்டு அதேவேளையில் தனது தனித்தன்மையும் குன்றாது வாழும் மொழியெனத் தமிழ் மொழி இலங்குகிறது. இதனாற்றான் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை "சீரிளமைத்திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே" என்றார். திராவிட மொழிக் குடும்பத்திலேயுள்ள மொழிகளுள்ளே மூத்தது தமிழ் மொழி என்பர். தொல்திராவிடம் அல்லது பழந்தமிழ் மொழியினுடைய மூலக்கூறுகளை இன்றும் கொண்டதாகத் தமிழ் மொழி விளங்குகின்றது என்பர். தமிழ் இரண்டாயிரம் ஆண்டுகாலத் தொன்மையான இலக்கியப் பாரம்பரியங் கொண்டது. எனவே இந்த இரண்டாயிரம் ஆண்டு இலக்கியப் பாரம்பரியத்தினூடாகத் தமிழ் வளர்ந்தவாற்றையே இக்கட்டுரை சுருக்கமாக விளக்க முற்படுகின்றது.

தமிழ் மொழி வரலாறு என்ற எண்ணக் கரு ஆரம்ப காலகட்டங்களிலேயே இருந்து வந்துள்ளது. சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்டது முதல் பெரிய புராணம் இயற்றப்பட்டது ஈறாக நோக்குகின்ற போது தமிழ் வரலாற்று அருட்டுணர்வு அவ்வக்காலத்தில் வாழ்ந்த இலக்கியக் காரருக்கு இருந்திருக்கின்றதென்பது புலனாகின்றது. மேலும் தமிழ் வரலாற்றைக் காலமுறைப்படி தொகுத்து மொழி வரலாற்றில் ஒருமையும் தொடர்ச்சியும் காண அறிஞர்பலர் முயன்றனர். அதன் விளைவாக புலவர் சரிதங்களும், இலக்கிய வரலாறுகளும் எழுந்தன. இறையனார்களவியல் உரையிலிருந்து இன்றுவரை பல்வேறு விதமான நோக்கு நிலைகளில் தமிழ் இலக்கிய வரலாறு ஆராயப்பட்டது; ஆராயப்படுகின்றது.

மேற்கூறிய நூல்வகைகளையும் அவற்றினுடைய நோக்கு நிலைகளையும் மனதிற் கொண்டு தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தைப் பல்வேறு காலகட்டங்களாக வகுத்துக் கூறுவது பொதுவான இயல்பாகி விட்டது. (சங்க, சங்கமருவிய, பல்லவ, சோழ, நாயக்க, ஐரோப்பிய, தற்காலங்கள்) இக்காலப்பகுப்பின் அடிப்படையில் தமிழ் இலக்கிய வரலாற்றினை நோக்கும் போது;

> "காலத்துக்கேற்ற வகைகள் அவ்வக்
> காலத்துக் கேற்ற ஒழுக்கமும் நூலும்
> ஞாலமுழுமைக்குமொன்றாய் எந்த
> நாளும் நலைத்திடும் நூலொன்றுமில்லை"

என்று மகாகவி பாரதியார் கூறுவது மிகப்பொருத்தமான கூற்றாகும். இலக்கியங்கள் 'காலக்கண்ணாடிகள்'. எனவே அவை அவ்வக்கால அரசியல், சமய, சமூக, பொருளியல் உறவுகளின் வெளிப்பபாடாகவே அமைந்து விடுகின்றன. ஆரம்பகாலங்களில் காதலையும் வீரத்தையும் பாடியவை அடுத்த காலத்தில் அறம்பாடின; பல்லவர் காலத்திலோ பக்திக்கு ஊடகமாயின; சோழர் காலத்தில் உலகியலின் பல்வேறு அம்சங்களையும் வெளிக்கொணர்ந்தன; நாயக்கர் காலத்தில் சமயத்தையும் தத்துவத்தையும் பற்றிக்கொண்டன; ஐரோப்பியர் காலத்தில் புதுமைகளை உள்வாங்கிக் கொண்டன; இருபதாம் நூற்றாண்டிலே் மானிடம் பாடின.

இலக்கியங்கள் தாம் பாடிய பொருளைப் போலவே பாட்டுடைத் தலைவர்களையும் காலத்துக்கேற்றவாறு மாற்றிக் கொண்டன. தலைமகள், தலைமகன், இறைவன், இறை அடியார். அரசன், வள்ளல் முதலானோரைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டிருந்த இலக்கியம் காலத்தின் தேவைக்கு ஏற்ப பொது மக்களைப் பாட்டுடைத் தலைவர்களாகக் கொள்ளத் தலைப்பட்டதையும் அறிய முடிகின்றது. காலத்துக்குக் காலம் சமூகத்தின் ஏகோபித்த தலைவர்களே பாட்டுடைத்தலைவர்களாகப்பட்டமையையும் அவதானிக்க முடிகின்றது.

தமிழ் இலக்கியம் காலத்தேவைகளுக்கு ஏற்றவாறு பல்வேறு வடிவங்கள் கொண்டது. இன்று தமிழில் தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்கள் உண்டு எனக் கூறுவர். இவையாவும் தமிழ் இலக்கிய வரலாற்றுப் பரப்பில் காலத்தின் தேவையை ஒட்டி எழுந்த இலக்கிய வடிவங்களேயாகும். ஆற்றுப்படை இலக்கியம் முதலாக புனைகதை இலக்கியம் ஈறாகப் பல்வேறு இலக்கிய வடிவங்களைத் தமிழ் தாங்கி வந்திருக்கின்றது. இது போலவே யாப்பு வகைகளும் காலத்துக்குக் காலம் மாற்றம் பெற்று வந்துள்ளன. அகவலில் தொடங்கி, கலிப்பா, வஞ்சிப்பா, வெண்பா, விருத்தப்பா, கண்ணி, சிந்து, கும்பி முதலானவை ஈறாகப் பல பாவினங்களையும் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வந்துள்ளது.

தமிழ் இலக்கிய வளர்ச்சியினூடாகத் தமிழ் மொழியும் வளாச்சி பெற்று வந்துள்ளது. தமிழ் இலக்கியங்களிற் பெரும்பாலும் எழுத்து வழக்குத் தமிழே பயின்று வந்துள்ளது. எனினும் காலந்தோறும் எழுந்த இலக்கியங்களினூடாகத் தமிழ்மொழியில் முதல் எழுத்துக்கள் இறுதி எழுத்துக்கள், மூவிடப்பெயர்கள், வேற்றுமை உருபுகள், முதலான பல்வேறு அம்சங்கள் மாற்றத்துக்கு உள்ளாகி இன்றுள்ள நிலையை அடைந்திருப்பதை அவதானிக்கலாம். தமிழ் செம்மொழியிலிருந்து இலகுதமிழ் தமிழ் இலக்கணமாற்றங்கள் மட்டுமன்றி செய்யுள், உரைநடை என்ற பாகுபாட்டடிப்படையில் தமிழ் உரைநடை என்பதும் தொல்காப்பியரது "பாட்டிடைவைத்தகுறிப்பினாலும்" என்று தொடங்கும் நூற்பாவின் ஆதாரத்திலிருந்து சிலப்பதிகாரம் குறிப்பிடும் உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்", இறையனார் களவியலுரை, உரையாசிரியரது உரை, உரைநடை வகைகள் எனத் தமிழ் உரைநடை பல்வேறு தன்மைகளுடன் காலத்துக்கேற்ற வகையில் வளர்ந்தும் மாற்றங்கள் பெற்றும் வந்துள்ளது.

எனவே தமிழ் இலக்கிய வரலாற்றடிப்படையில் நோக்குகின்றபோது தமிழ் இலக்கியங்களினூடாகப் பாடுபொருள், வடிவம், யாப்புவகை, மொழிநடை முதலான அம்சங்களில் காலத்திற்கேற்றவாறு மாற்றம் பெற்று வளர்ந்து வந்துள்ளமையை அறிய முடிகின்றது.

மேலே கூறப்பட்ட அம்சங்களை நோக்கும் போது இலக்கியகர்த்தா என்பவன் தான் வாழுகின்ற சூழலுக்குக் கட்டுப்பட்டவன் என்பது தெளிவாகிறது. அதேவேளை தான் எடுத்துக் கொண்ட பொருளை விளக்குவதற்கு அவன் பல ஊடகங்களைக் கையாண்டுள்ளான் என்பதும் புலனாகின்றது. எனவே அது அவனது சுதந்திரம். எழுத்தாளனுக்குக் கட்டுப்பாடு விதிக்கும்போது அது இலக்கியமாக அமையாது. அது வெறும் "எழுத்துக் கோவை" யாகவே காணப்படும். எனவே எழுத்தாளனது சுதந்திரமான இலக்கிய வடிவங்களின் தோற்றத்துக்குக் காலாக அமைந்துள்ளது. இன்றைய இலக்கிய உலகில் மரபு நவீனத்துவம் முதலான வேறுபாடுகள் புகுந்துள்ளன. இலக்கியத்தில் மாற்றம் என்பது அவசியமானது. மாற்றமில்லாது போனால் இலக்கியமும் மொழியும் "இறையாத கேணி" யாகிப் போய்விடும். எனவே மாற்றத்தை எழுத்தாளன் புகுத்துகின்றபோது அதனிற்பாகுபாடுகாட்டுவது முறையல்ல. மக்கள் மன்றத்தில் அவை நுகரப்படும் போது அவர்களது "கொள்வனவிலேயே" அதன் திறமையோ, திறமை இன்மையோ, பொருத்தப்பாடோ, தீர்மானிக்கப்படும். எனவே மக்களது ஆதரவும் காலச் சூழலும் தான் இலக்கியத்தின் தேவையையும் பொருத்தப்பாட்டையும் நிர்ணயிக்க வேண்டும்.

ஆகவே எழுத்தாளன் தான் புலப்படுத்த விரும்பும் கருத்துக்கு ஏற்றவாகனமாக அவன் விரும்பும் வடிவத்தைக் கையாளும் உரிமை அவனுக்கிருத்தல் வேண்டும். அதற்குக் கட்டுப்பாடு விதிப்பது முறையன்று. சங்க காலந்தொட்டு இன்றுவரை இக்கட்டுப்பாடுகளும் வரையறைகளும் புலவனைக் கட்டுப்படுத்தியிருப்பின் சிறந்த தமிழ் இலக்கியச் செல்வங்களை நாம் பெற்றிருக்கவியலாது.

எனவே இரண்டாயிரம் ஆண்டு கால இலக்கியப் பாரம்பரியம் என்பதை நாம் சுமையாகத் திணிக்காது அந்தப் "பாரியம்" என்ற உறுதிமிக்க தளத்திலே நின்று காலந்தோறும் ஏற்படும் மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதாகவும், சர்வதேச தரத்துக்குச் சமமானதாகவும் தமிழை வளம்படுத்தவேண்டும். அதற்கு நமது இலக்கிய வரலாற்றுப் பாரம்பரியம் உந்து சக்தியாக அமைய வேண்டும்.

**வ. மகேஸ்வரன்**
விரிவுரையாளர்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம்

## தேசியநிலைத் தமிழ் மொழித்தினப் போட்டி 1993

### 4.1 - பிரிவு 1 - வாசிப்பு.

| மாணவரின் பெயர் | பாடசாலை | மாகாணம். |
|---|---|---|
| 1. ஞா. சஞ்சீவன் | தி/புனித அந்தோனியார் ம. வி | வடக்குகிழக்கு மாகாணம் |
| 2. செல்வி. எம். ஆர். ரிமாஷா | ஹ/யக்கஸ்முல்ல மு. க. வி. வீரகெட்டிய | தென் மாகாணம் |
| 3. செல்வி. கார்த்திகா பரதலிங்கம் | கொ/ நல்லாயன் பெ. ம. வி. கொழும்பு 13. | மேல் மாகாணம் |
| 4. செல்வி. எம். எவ். பாத்திமா | கே/ஸாஹிரா மத்தியகல்லூரி, மாவனெல்ல | சப்பிரகமுவ மாகாணம் |
| 5. செல்வி. வெங்கடாசலம்தயானி | ப/பாரதி வித்தியாலயம், பதுளை | ஊவா மாகாணம் |
| 6. செல்வி. ஏ. றெஸ்லியா உம்மா | அ/அசரிகம மு. வி, அநுராதபுரம் | வடமத்திய மாகாணம் |
| 7. செல்வன். வி. ருஷாந்பாபு | நு/கொட்டகலை த.ம.வி. கொட்டக்கலை | மத்திய மாகாணம் |
| 8. செல்வி. எஸ். கார்த்திகா | கல்/அக்ஸா மு.ம.வி. கற்பிட்டி | வடமேல் மாகாணம். |

### 4.1 - பிரிவு 2 - வாசிப்பு

| | | |
|---|---|---|
| 1. செல்வி. இ. யாழினி | தி/விபுலானந்த வித்தியாலயம், திருகோணமலை | வடக்கு கிழக்கு மாகாணம் |
| 2. செல்வி. எம். பாதிமாமஸாஹரா | மாறை/மின்ஹாத் ம. வி. திக்வெல்ல | தென் மாகாணம் |
| 3. செல்வி. எம். றினோஸா | கம்/அல்முபாரக் மத்திய கல்லூரி, மல்வானை. | மேல் மாகாணம் |
| 4. செல்வி. எம். இஸட். எப். ருஸ்தா | கே/திப்பிட்டிய மு. வி. அரநாயக்க | சப்பிரகமுவ மாகாணம் |
| 5. செல்வன். முக்கன் விஜயதீபம் | ப/கோணக்கலைல மத். வி. பசறை | ஊவா மாகாணம் |
| 6. செல்வி. பி. எம். எப். சியானா | பொ/பொலன்நறுன மு. ம. வி. கடுறவல | வடமத்திய மாகாணம் |
| 7. செல்வி. எம். ஹாஜரா | நு/பூண்டுலோய த. ம. வி. கொத்மலை | மத்திய மாகாணம் |
| 8. செல்வி. எம். எம். எப். சமீரா | கு/கல்கமுவ மு. வி. கல்கமுவ | வடமேல் மாகாணம் |

### 4.2 - பிரிவு 1 - எழுத்தாக்கம்

| | | |
|---|---|---|
| 1. செல்வி. இ. சண்முகப்பிரியா | வ/இறம்பைக்குளம் பெ. ம. வி. வவுனியா | வடக்குகிழக்கு மாகாணம் |
| 2. செல்வி. எம். இஸட். என். நிப்ரா | மாறை/அந்நூர் மகளிர் ம. வி. தெனிபிட்டிய | தென் மாகாணம் |
| 3. செல்வி. டி. மைதிலி | கம்/ விஜயரட்னம் ம. ம. வி. நீர்கொழும்பு | மேல்மாகாணம் |
| 4. செல்வன். ஏ. எஸ். எம். பாஹிம் | கே/கராகொட மு. ம. வி. எட்டியாந்தோட்ட | சப்பிரகமுவ மாகாணம் |
| 5. செல்வி. ஜெயராஜா சுபாங்கினி | ப/நியாபெத்த இல/தவி. பண்டாரவளை | ஊவா மாகாணம் |
| 6. செல்வன். ஏ. எச். எம். சப்ரின் | அ/இக்கிரிகொல்லாவ மு. ம. வி. வகமல்கொல்லாவ | வடமத்திய மாகாணம் |
| 7. செல்வன். எஸ். வசந்த் | க/ஸ்ரீமுத்துமாரிஅம்மன் த. ம. வி. கம்பளை | மத்திய மாகாணம் |
| 8. செல்வி. எஸ் றிழ்கா | கு/அல்-இர்பான் மு.வி, பொல்காஹவெல. | வடமேல் மாகாணம் |

### 4.3. - பிரிவி 2 - கட்டுரை

| | | |
|---|---|---|
| 1. செல்வன். எம். ரமணசுந்தரம் | மட்/புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம் |
| 2. செல்வி. எம். எஸ். முமீஸா | ஹ/யக்கஸ்முல்ல மு.க.வி, வீரகெட்டிய | தென்மாகாணம் |
| 3. செல்வன். ஆர். சுகன் | ரத்/சாந்ததோமஸ் ம வி, கல்கிசை | மேல் மாகாணம் |
| 4. செல்வி. எஸ். எனிட்டா இவ்லீன் | கே/பலாங்கொட த. வி., பலாங்கொட | சப்பிரகமுவ மாகாணம் |
| 5. செல்வி. சிவஞானம் ஹேமதர்சினி | ப/ தமிழ் மகளிர் ம. வி. பதுளை | ஊவா மாகாணம் |
| 6. செல்வன். ஏ. எஸ். றிஸ்லான் | அ/கலாவெவ மு. ம. ம. வி., விஜிதபுர | வடமத்திய மாகாணம் |
| 7. செல்வன். எம். வசீகரன் | க/கலேபோக்கு தமிழ் வி. மடுல்கல | மத்திய மாகாணம் |
| 8. செல்வி. எம். என். சஹீலா | நி/அல்-மதீனா ம. வி. மாகோ | வடமேல் மாகாணம் |

### 4.3. - பிரிவு 3 - கட்டுரை

| | | |
|---|---|---|
| 1. செல்வி. வை. மணிமேகலை | தி/புனித அந்தோனியார் ம வி. திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். எஸ். எப். புஷ்ரா | கா/கலைமானியா க. வி. ஹிரிம்புர, காலி | தென் மாகாணம். |
| 3. செல்வி. டி. மஞ்சுளா | கொ/இராமநாதன் இ. ம. க. கொழும்பு-4 | மேல் மாகாணம். |
| 4. செல்வி. எஸ். சிவப்பிரியா | இ/பலாங்கொட த.ம.வி. பலாங்கொட | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. எச். ஜொகராபீபி | ப/அல்பதாரியா மு. வி அப்புத்தளை | ஊவாமாகாணம். |
| 6. செல்வி. ஆர் மின்னத்துல்ஹானியா | அ/ நொச்சியாகம மு. வி. அநுராதபுரம் | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. வி. யோகேஸ்வரி | க/சரஸ்வதி த. ம. வி. புசல்லாவ | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. எஸ். எப். அரூசியா | கு/ரி/அல்-அஸ்ரக் மு. வி. ரிதீகமை | வடமேல் மாகாணம். |

**4.3 - பிரிவு 4 - கட்டுரை**

**மாணவர் பெயர் :**

| | | |
|---|---|---|
| 1. செல்வன். கு. கோடீஸ்வரன் | கமு/தம்பிலுவில் ம. ம. வி., கல்முனை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். எச். என். ஸுஹறா | கா/ஸாஹிரா ம. வி. குருந்துவத்த, கந்தோட்ட | தென்மாகாணம். |
| 3. செல்வன். எஸ். ஜெய்க் குமார் | களு/சாஹிரா ம. வி. தர்ஹாநகர். | மேல் மாகாணம். |
| 4. செல்வி. ஏ. பீ. எப். நஸ்லியா | தெஹி/நாபாவள மு. ம. வி. அவிசாவெல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. அருணாசலம் தமயந்தி | ப/சரஸ்வதி ம. ம. வி. பதுளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. வை. பௌசுல்கலீமா | அ/கலாவெவ மு. ம. விஜிதபுர | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வன். எஸ் ஜீவேந்திரன் | நு/தலவாக்கொல்லை த. ம. வி. தலாவாக்கொல்லை | மத்திய மாகாணம். |
| 8. செல்வன். அமல்ராஜ் | சிலா/சென்.பேர்ணதேத் த. ம. வி, சிலாபம் | வடமேல் மாகாணம். |

**4.4 - பிரிவு 3 - கவிதை**

| | | |
|---|---|---|
| 1. செல்வன். அ. ம. ஹிஸ்புல்லா | தி/அல்-அக்ஸா ம. வி. திருகோணமலை. | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். இஸட். அறபா | மாறை/அல்மினா ம. வி. மீயல்ல | தென் மாகாணம். |
| 3. செல்வன். எச். எம். ஹனீபா | கம்/அல்முபாரக் மத்திய கல்லூரி. மல்வானை | மேல் மாகாணம். |
| 4. செல்வன். ஏ. டபிள்யூ. எம். அஸ்வர் | கே/நாராங்கல்ல மு. வி. வறகாபொல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வன். எம். சிவசுப்பிரமணியம். | ப/கலைமகள் த. வி., பசறை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. எம். என். றஹுமானியா | பொ/அல்-றிபாய் மு. வி., தம்பாலை. | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. ஜி. வினோதினி | அ/புனித கபிரியல் ம. வி. அட்டன் | மத்திய மாகாணம். |
| 8. செல்வன். எம். ஐ. எம். றிபாத் | பு/சாஹிரா ம. ம. வி. புத்தளம் | வட மேல் மாகாணம். |

**4.4. - பிரிவு 4 - கவிதை**

| | | |
|---|---|---|
| 1. **செல்வன். எஸ். ஐ. றிபால்** | தி/மூதூர் ம. ம. வி., திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. **செல்வன். ஹாலித்மௌலானா** | ஹ/சாஹிரா ம. ம. வி, ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. **செல்வன். எஸ். ஏ. செய்யத்**மர்வான் | களு/களுத்துறை மு. ம. வி., களுத்துறை | மேல் மாகாணம். |
| 4. **செல்வி.** ஏ. எப். எஸ். ரபீக்கா | கே/பாபுல்ஹசன் வி. வறக்காப்பொல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. **செல்வி. பீ. எம். பாத்தி**மாரிஸ்னா | ப/சேர் ராஸீக்பரீட் ம. வி. பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. எப். சித்திநஸீரா | அ/கலாவெவ மு. ம. விஜிதபுர | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வன். எம். உதயகுமார் | நு/இராகலை த. ம.' வி., இராகலை | மத்திய மாகாணம். |
| 8. செல்வன். ஏ. எல். மிஸ்வர்தீன் | நிக/அபுக்காகம மு. ம. வி., நிகவரெட்டிய | வடமேல் மாகாணம். |

**4.5 - பிரிவு 3 - சிறுகதை**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. சி. மாதுமை | தி/புனித மரியாள்கல்லூரி, திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். டீ. நாஜிஹறா | மாறை/அந்நூர் மகளிர் ம. வி. தெனிபிட்டிய | தென் மாகாணம். |
| 3. செல்வி. எம். எம். எஸ். சமீலா | களு/ஜீலான் ம. ம. வி. ஹேனமுல்ல | மேல் மாகாணம். |
| 4. செல்வி எப். சுமைரா | கே/திப்பிட்டிய மு. வி. அரநாயக்க | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வன். எம். ஆர். எம். பவ்சாட் | ப/குருத்தலாவ மு. ம. ம. வி. வெளிமடை | ஊவா மாகாணம். |
| 6. செல்வன். ஏ. சீ. ஜனோஸ் | அ/சாஹிரா மு. ம. வி., அனுராதபுரம் | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வன். எஸ். சிறிஸ்டோபர்லியோ | நு/என்பீல்ட் த. வி. டிக்கோயா | மத்திய மாகாணம். |
| 8. செல்வன். எம். ஜே. எம். இக்ரம் | குளி/இஹலகினியம மு. வி., பிங்கிரிய, பன்னல. | வடமேல் மாகாணம். |

**4.5. - பிரிவு 4 - சிறுகதை**

| | | |
|---|---|---|
| 1. செல்வன். ச. சசீதரன் | மட்/வந்தாறுமூலை ம. ம. வி., மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். என். மஸியா | கா/மழ்ஹாருஸ் ஸுல்ஹியா ம. ம. வி., காலி | தென் மாகாணம். |
| 3. செல்வன். கே. செல்வ மோகன் | கொ/இந்துக்கல்லூரி, கொழும்பு - 04. | மேல் மாகாணம். |
| 4. செல்வி. கே. எம். பௌசியா | இ/அஸ்ஸலாம் ம. வி. கொடகவெல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. அருளானந்தன் குமுதினி | ப/சரஸ்வதி ம. ம. வி. பதுளை | ஊவா மாசாணம். |
| 6. செல்வி. ஏ. ஜே. கமருன்னிஷா | அ/ஸாஹிரா மு. ம. வி. அனுரதபுரம் | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வன். ஏ. எம். அலவி | க/அல்மனார் ம. வி. ஹந்தஸ்ய | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. எஸ். ஏ. முல்ஹிமா | நாத்/அல் ஹிராம. வி., நாத்தாண்டி | வடமேல் மாகாணம். |

**4-6 - பிரிவு 1 - பேச்சு**

| மாணவர் பெயர் | பாடசாலை | மாகாணம் |
|---|---|---|
| 1. செல்வன். எஸ். ரைர்ரஸ்றாகேஷ் | மட்/மெதடிஸ்த மத்திய கல்லூரி, மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம் |
| 2. செல்வி. எம். ஆர். எச். றிஸ்லா | ஹ/ஸாஹிரா ம. ம. வி., ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. செல்வி. டி. எப். றின்னோஸா | களு/அல் பஹ்ரியா ம. வி., தொட்டவத்தை பாணந்துறை | மேல் மாகாணம். |
| 4. செல்வி. எம். ஜே. எப். நஸ்மின் | கே/ஸாஹிரா ம. ம. வி., மாவனெல்ல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வன். பஹுருடீன் மொஹமட்சிபான் | ப/அல்அதான் ம. வி. பதுளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வன். ரி. பாயிஸ் | பொ/அல்-அக்ஸா ம. வி. காலிங்கல | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. எச். முப்ளிஹா | க/விகாரமகாதேவி, பா. வி. கண்டி | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. ஏ. ஆர். ரம்ஸா | கு/சாஹிரா முன்னோடி மு. வி. குருநாகல் | வடமேல் மாகாணம். |

**4.6 - பிரிவு 2 - பேச்சு.**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. கோ. தர்ஷனி | கமு/இராமசிருஷ்ணா கல்லூரி, கல்முனை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். எம். எஸ். நஜீமியா | ஹ/ஸாஹிரா ம. ம. வி. ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. செல்வன். எம். ஜே. எம். ரௌசான் | கொ/டி. எஸ். சேனநாயக்க ம. வி. கொழும்பு. 8 | மேல் மாகாணம். |
| 4. செல்வன். ரி. பார்த்தீபன் | கே/புலத்கொஹபிட்டிய த. வி., எட்டியாந்தோட்டை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வன். ரி. பார்த்தீபன் | மொ/அளுப்பொத்த மு. க. வி. படல்கம்புர | |
| 5. செல்வன். முஹமட்கபூர் மொஹமட்ரிப்கான் | அ/ஹொறவபொத்தான மு. வி., ஹொறவபொத்தான | ஊவாமாகாணம். |
| 6. செல்வன். எம். ஐ. மொஹமட் அஜ்மீர் | க/அல்மனார் ம. ம. வி., கல்ஹின்ன | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. ஷர்மிலா ஜேகபூர் | கல்/முரைச்சோலை மு. ம. வி. கற்பிட்டி | மத்திய மாகாணம். |
| 8. செல்வன். எஸ். எல். அன்வர் | | வடமேல் மாகாணம். |

**4.6 - பிரிவு 3 - பேச்சு**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. ஈ. சௌமியா | மட்/வின்சன்ட் பெ. உயர்தர பா, மட்டக்களப்பு | வடக்குகிழுக்கு மாகாணம் |
| 2. செல்வி. சாந்திகிருஷ்ணபிள்ளை | கா/உஸ்வத்துன் ஹஸனா ம. ம. வி. கட்டுக்கொடை, காலி | தென் மாகாணம். |
| 3. செல்வி. ஆர். எப். மசூரா | நீர்/அல்-ஹிலால் ம. வி. நீர்கொழும்பு | மேல் மாகாணம். |
| 4. செல்வி. எம். எஸ். எப். ரிஸானா | கே/நாபாவல மு. ம. வி. தெஹியோவிற்ற | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. அருளானந்தன் சிவநிதி | ப/தமிழ் மகளிர் ம. வி., பதுளை | ஊவாமாகாணம். |
| 6. செல்வன். எம். எஸ். றினோஸ் முகமட் | அ/ஸாஹிரா முஸ்லிம் மகாவித்தியாலயம், அநுராதபுரம் | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வன். கே. தேவானந்த் | க/மதீனா மு. க. வி. மடவளை | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. ஆர். இந்துமதி | கு/இந்துதமிழ் ம. வி. குருநாகல். | வடமேல் மாகாணம். |

**4-6 - பிரிவு 4 - பேச்சு**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. தி. குருப்பிரியா | வ/நெடுங்கேணி ம. வி., வவுனியா | வடக்கு கிழக்குமாகாணம். |
| 2. செல்வி. ஏ. ஏ. எம். ரிஸ்மி | கா/ஸாஹிரா ம. வி. குருந்துவத்த, கிந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. செல்வன். எப். சந்திரபிரகாஷ் | கொ/றோயல்கல்லூரி, கொழும்பு - 07 | மேல் மாகாணம். |
| 4. செல்வன். எம். எஸ். எம். இக்பால் | கே/சுலைமானியா ம. ம. வி. ருவான்வெல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. அப்துல்லதீப்லுத்விரிகாசா | ப/வெளிமடை மு. ம. வி. வெளிமடை | ஊவா மாகாணம். |
| 6. - | - - - | வடமத்திய மாகாணம் |
| 7. செல்வி. எம். சுபத்திரா | நு/பரி திரித்துவக்கல்லூரி, நுவரெலியா | மத்திய மாகாணம். |
| 8. செல்வன். எம். ஏ. எம். சாஜஹான் | சி/நஸ்ரியா மு. ம. வி. சிலாபம் | வடமேல் மாகாணம். |

**4-7 - பிரிவு 1 - பாஓதல். - தனி**

| மாணவரின் பெயர் | பாடசாலை | மாகாணம் |
|---|---|---|
| 1. செல்வி. கு. கீர்த்தனா | மட்/வின்சன்ட் பெ. உயர்தர. பா., மட்டக்களப்பு | வடக்கு கிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. வீ. யேசுமரியாள் | கா/திவிந்துற த. க. வி. எத்கந்துற | தென் மாகாணம். |
| 3. செல்வி. எப். ஜெசிந்தா | கம்/றோ. க. த. வி. வத்தளை | மேல் மாகாணம். |
| 4. செல்வன். எம். ஜெகதீஸ்வரன். | இ/ றை. த. வி. இம்புல்பே பலாங்கொடை | சப்பிரகமுவ. மாகாணம். |
| 5. செல்வி. மகேஸ்வரன் ராகினி | ப/பண்டாரவளை த. ம. ம. வி. பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. ஜே. சாமிலா | அ/ கலாவெவ மு. ம. ம. வி. விஜிதபுர | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வி. சம்ளா தியாப்தீன் | க/விகாரமகாதேவி. பா. வி. கண்டி | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. ஏ. ஏஸ் சாஹிராபேகம் | நி/நிகவெரட்டிய முன்னோடி மு.வி நிகவெரட்டிய | வடமேல் மாகாணம். |

**4.7 - பிரிவு 2 - பாஓதல் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வன். பி. பா. பிரணவன் | தி/கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வன்.எஸ்.ஏ.இஸட் எஸ்.மௌலானா | ஹ/ஸாஹிரா ம. ம. வி. ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. செல்வன். கே. பிரபாநந்தனன் | கொ/றோயல் கல்லூரி-கொழும்பு-07 | மேல் மாகாணம். |
| 4. செல்வன். ஆர். மணிவன்னன் | இ/றை. த. வி. இம்புல்பே. பலாங்கொடை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. இராமநாதன்ஸ்ரீரஞ்சனி | ப/பண்டாரவளை த. ம. வி., பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. எம். எஸ். குழந்தைஉம்மா | பொ/அல்—கிலால் மு. வி. தம்பாலை, | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வி. கே. விஜிதா | மா/புனிததோமையார் பெ. க. மாத்தளை | மத்திய மாகாணம். |
| **8. செல்வி. ஏ. எச். இப்திகாபானு** | **கல்/குறிஞ்சிப்பிட்டி மு. வி. கற்பிட்டி.** | வடமேல் மாகாணம். |

**4.7 - பிரிவு 3 - பாஓதல் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. சி. கிருபாளினி | மட/வின்சன்ட் பெ. உ. பா. மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. ஏ. ஏ. ஜனுல்யெசீனா | மாறை/மின்ஹாத் ம. வி. திக்வெல | தென் மாகாணம். |
| 3. செல்வி. ஜே. லாவண்யா | கொ/புனித அந்தோனியார் ம. வி. கொழும்பு-03 | மேல் மாகாணம். |
| 4. செல்வி. ஏ. எலிஸபெத் | இ/றை த. வி., இம்புல்பே, பலாங்கொடை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. தாமோதரம் தர்ஷினி | ப/பண்டாரவளை த. ம. ம. வி. பண்டாரவளை. | ஊவா மாகாணம். |
| 6. செல்வன். யூ. எஸ். இக்பால் | பொ/அல்-ஹிலால் மு. வி. தம்பாலை | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வி. எஸ் மனோரஞ்சிதபுஸ்பமலர் | க/கதிரேசன் கு. ம. வி. நாவலப்பிட்டி | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. ஏ. அரூஸா | ஆர/உமர்-பாரூக் ம. வி., ஆராச்சிக்கட்டுவ | வடமேல் மாகாணம். |

**4.7 - பிரிவு 4 - பாஓதல் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. சி. சுதர்சினி | மட்/வின்சன்ட்மகளிர் உ. பா, மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வன் எம். ரீ. எம். ரிபா | மாறை/அறபா. ம. ம. வி, வெலிகம | தென் மாகாணம். |
| 3. செல்வி. எப். ஜசோதா | கொ/திருக்குடுப்பக் கன்னியர் மடம், கொழும்பு-04 | மேல் மாகாணம். |
| 4. செல்வன் எம். எம். எஸ். ஜெஸீம் | கே/சுலைமானியா ம.ம.வி,கன்னதோட்ட. ருவான்வெல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி இராமநாதன் சத்திய நாராயினி | ப/பண்டாரவளை த. ம. ம. வி, பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி எஸ. ஏ. எப். காமிலா | அ/கலாவெவ மு. ம. ம. வி. விஜிதபுர | வட மத்திய மாகாணம் |
| 7. செல்வி. எஸ். பாத்திமா ஜெஸ்மின் | க/சரஸ்வதி த. ம. வ., புசல்லாவ | மத்திய மாகாணம். |
| 8. செல்வி ரி. தீபராணி | பு/பாத்திமா இம. ம. வி. புத்தளம் | வடமேல் மாகாணம். |

**4.8 - பிரிவு 1 - இசை வாய்ப்பாட்டு அபிநயம் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. ச. தேனுஜா | மட்/வின்சன்ட் மகளிர் உ. பா. மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். ஜே. எஸ். நிஸ்மியா | ஹ/ஸாஹிரா ம. ம. வி., ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. செல்வன். எஸ். சந்துரு | புனித அந்தோனியார் ம. வி. கொழும்பு-13 | மேல் மாகாணம். |
| 4. செல்வி. எம். ஜே. எப். நஸ்மின் | கே/ஸாஹிரா மத்திய கல்லூரி, மாவனெல்ல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. மகேஸ்வரன் ராகினி | ப/பண்டாரவளை த. ம. வி., பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. ஏ. எம். சபானா | அ/கலாவெவ மு. ம. ம. வி., விஜிதபுர | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. பி. நல்லம்மா | நு/டயகம மேற்கு இல. 2. த. வி. அக்கரபத்தன | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. ஏ. எஸ். சாஹிராபேகம் | நி/நிகவெரெட்டிய முன்னோடி மு. வி. நிகவெரட்டிய | வடமேல் மாகாணம். |

**4.9 - பிரிவு 1 - இசை வாய்ப்பாட்டு அபிநயம் - குழு.**

| மாணவர் பெயர் | பாடசாலை | மாகாணம் |
|---|---|---|
| 1. தி/புனிதமரியாள் கல்லூரி, | திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. மாறை/ஹன்பர்ட் த. க. வி, | தெனியாய | தென் மாகாணம். |
| 3. கொ/சைவமங்கையர் வி, | கொழும்பு-06 | மேல் மாகாணம். |
| 4. கே/பதுரியா மத்திய கல்லூரி, | மாவனெல்ல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ப/கனவரல்ல இல.2 த. வி. | ப/தனவரல்ல இல 2 த. வி | ஊவா மாகாணம். |
| 6. பொ/அல்-றிபாய் மு. வி, | தம்பாலை | வடமத்திய மாகாணம். |
| 7. க/ஸ்ரீமுத்துமாரியம்மன் த. ம. வி | கம்பளை, உடபலாத்த | மத்திய மாகாணம். |
| 8. சிலா/வடிவாம்பிகா தமிழ். வி, | சிலாபம். | வடமேல் மாகாணம். |

**4.10 - பிரிவு 2 - இசை - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. வி. ஹம்சானந்தி | கமு/கார்மேல் பாத்திமா கல்லூரி, கல்முனை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வன். ஆர். நவாஸ்தீன் | ஹ/ஸாஹிராம. ம. ம. வி, ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. செல்வன். கே. பிரபாநந்தனன் | கொ/றோயல் கல்லூரி கொழும்பு | மேல் மாகாணம். |
| 4. செல்வன். என். சிவபெருமான் | கே/புலத்கொஹுபிட்டிய த. வி. எட்டியாந்தோட்டை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. இராமநாதன் ஸ்ரீரஞ்சினி | ப/பண்டாரவளை த. ம. ம. வி, பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. எஸ் எம். முபீனா | பொ/பொலன்னறுவ மு. ம. ம. வி, கதுறுவெல | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வி. பி. கலைவாணி | க/சரஸ்வதி த. ம. வி, புசல்லாவ | மத்திய மாகாணம். |
| 8. செல்வன். எம். கே. எம். ஸாமில் | பு/சாஹிரா ம. ம. வி புத்தளம். | வடமேல் மாகாணம். |

**4.10 - பிரிவு 3 - இசை -தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. பிரியலோஜினி | தி/ஸ்ரீ சண்முகவித்தியாலயம், திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். டபிள்யு. எஸ் நஸ்மியா | ஹ/ஸாஹிரா ம. ம. வி, ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. செல்வி. ஏ. அருட்செல்வி | கொ/ இராமநாதன் மகளிர் கல்லூரி. கொழும்பு4 | மேல் மாகாணம். |
| 4. செல்வன். எம். வை. எம். ரிஸ்வான் | இ. ஜெய்லானி - பலாங்கொடை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. பெர்னான்டோ யூடித்குரூஸ் | ப/ பண்டாரவளை த.ம.ம.வி. பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வன். ஏ. நாஸர் | பொ/முஸ்லிம் ம. ம. வி. தமன்கடுவ | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வி. எஸ். மனோரஞ்சித பஸ்பமலர் | க/கதிரேசன் கு.ம.வி. நாவலப்பிட்டிய | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. எஸ். தனலட்சுமி | சிலா/ நஸ்ரியா மு. ம. வி. சிலாபம். | வடமேல் மாகாணம். |

**4.10 - பிரிவி 4 - இசை - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. மே. மீனாட்சி | தி/ஸ்ரீ சண்முகவித்தியாலயம், திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வன். எம். எப். எம். சியாம் | ஹ/ஸாஹிரா ம. ம. வி, ஹம்பாந்தோட்டை | தென்மாகாணம் |
| 3. செல்வி. ஜீ. பெலிசியா நிரஞ்சனி | கொ/திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு4 | மேல் மாகாணம. |
| 4. செல்வன். ஏ. எஸ். சிஹாம் | கே/ஸாஹிரா மத்திய கல்லூரி, மாவனெல்ல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வன். பீ. நித்தியானந்தன். | ப/பண்டாரவளை த.ம.ம.வி. பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வன். எம். ஐ. பைசல் | அ/கலாவெவ மு.ம.ம.வி. விஜிதபுர | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. எஸ். சத்தியவாணி | க/நல்லாயன் ம.க.வி. கண்டி | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. ரி. தீபராணி | பு/பாத்திமா ம.ம.வி. புத்தளம். | வடமேல் மாகாணம். |

**4.11 - பிரிவு 2 - இசை - குழு**

| | | |
|---|---|---|
| 1. மட்/வின்சன்ட் மகளிர் உ.பா | மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. கா/ஸாஹிரா ம.வி | குருந்துவத்த, கிந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. கொ/நல்லாயன் பெ.ம.வி | கொழும்பு-13 | மேல் மாகாணம். |
| 4. கே/றை த. ம. வி | இம்புல்பே | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ப/பண்டாரவளை த. ம. ம. வி. | பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. அ/ஹொறவ பொத்தான மு.வி | ஹொறவபொத்தன. | வட மத்திய மாகாணம். |
| 7. க/மடுல்கல த.வி | மடுல்கல, பன்வில | மத்திய மாகாணம். |
| 8. நா/அல்-ஹிரா ம. வி | நாத்தாண்டிய | வடமேல் மாகாணம். |

**4.11 - பிரிவு 3- இசை - குழு**

| பாடசாலை | முகவரி | மாகாணம் |
|---|---|---|
| 1. மட்/வின்சன்ட் மகளிர் உ. பா | மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. மாறை/சஹுளந்தாவ த. க. வி | பிட்டபெத்த | தென் மாகாணம். |
| 3. கொ/நல்லாயன் பெ. ம. வி | கொழும்பு-13 | மேல் மாகாணம். |
| 4. கே/புளத்கொஹறுப்பிட்டிய த. ம. வி | எட்டியாந்தோட்டை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ப/பண்டாரவளை, ம. ம. வி, | பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. அ/கலாவெவ மு. ம. ம. வி. | விஜிதபுர | வட மத்திய மாகாணம். |
| 7. க/கதிரேசன் கு. ம. வி | நாவலப்பிட்டிய, பஸ்பாகே | மத்திய மாகாணம். |
| 8. சிலா/நஸ்ரியா மு. ம. வி | சிலாபம் | வடமேல் மாகாணம். |

**4.11 - பிரிவு 4 - இசை - குழு**

| | | |
|---|---|---|
| 1. தி/ஸ்ரீ சண்முகவித்தியாலயம் | திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம் |
| 2. ஹ/ஸாஹிரா ம. ம. வி | ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம் |
| 3. கொ/சைவமங்கையர் வித்தியாலயம் | கொழும்பு-06 | மேல் மாகாணம் |
| 4. கே/சுலைமானிய ம. ம. வி. | ருவான்வெல்ல | சப்பிரகமுவ மாகாணம் |
| 5. ப/பண்டாரவளை த.ம.ம.வி. | பண்டாரவளை | ஊவா மாகாணம் |
| 8. அ/கலாவெல மு. ம. ம. வி. | விஜிதபுர | வடமத்திய மாகாணம் |
| **7. மா/பாக்கிய ம. க. வி** | **மாத்தளை** | மத்திய மாகாணம் |
| **8. பு/பாத்திமா ம. ம. வி** | புத்தளம். | வடமேல் மாகாணம். |

**4.12 பிரிவு 1 - நடனம் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. பா. நளாயினி | தி/புனிதமரியாள் கல்லூரி, திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. பர்ஸானா நிஸார் | கா/உஸ்வத்துன் ஹஸனா ம.ம.வி,இ கட்டுகொடை, காலி | தென்மாகாணம். |
| 3. செல்வன். பி. சஞ்சயன் | கொ/இந்துக்கல்லூரி, கொழும்பு-04 | மேல் மாகாணம். |
| 4. செல்வி. ஏ. ஜயந்தி | இ/சீ. சீ. தமிழ்வித்தியாலயம், பலாங்கொடை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. மகேஸ்வரன் ராகினி. | ப/பண்டாரவளை த. ம. ம வி. பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. ஜே. சாமிலா | அ/கலாவெவ மு. ம. ம. வி. விஜிதபுர | வட மத்திய மாகாணம். |
| 7. செல்வி. எஸ். துஷ்யந்தினி | க/விகாரமகாதேவி பா. வி , கண்டி | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. என். துர்க்காதேவி | சிலா/வடிவாம்பிகா தமிழ். வி. சிலாபம் | வடமேல் மாகாணம். |

**4.12 பிரிவு 2 - நடனம் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. ஜெ. வைஷ்ணவி | தி/புனித மரியாள்கல்லூரி, திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. எம். எம். எப். ஸப்ரா | ஹ/ஸாஹிரா ம. ம. வி, கட்டுக்கொடை, காலி | தென் மாகாணம். |
| 3. செல்வி. எம். காயத்ரி | கொ/இராமநாதன் இ. ம. க. கொழும்பு-04 | மேல் மாகாணம். |
| 4. செல்வி. ரி. சசிகலாதேவி | இ/சீ. சீ. தமிழ் வித்தியாலயம், பலாங்கொடை | சப்பிரகமுவ மாகாணம் |
| 5. செல்வி. நடாஜா சுபாஷினி | ப/ஹப்புத்தளை த. ம. வி. ஹப்புத்தளை | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. ஆர். கார்த்திகா | அ/ஸாஹிரா மு. ம. வி. அநுராதபுரம். | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. ஜே. பிரபாஷினி | நு/ஹைலன்ஸ் ம. ம. வி. அட்டன் | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. பி. எஸ். பானுரேகா | கு/சாஹிரா முன்னோடி மு. வி. குருநாகல். | வடமேல் மாகாணம். |

**4.12 பிரிவு 3 - நடனம் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. ப. அபிராமி | தி/புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. ஏ. பானு | மாறை/தாருல் உலூம். ம. வி. மாத்தறை | தென் மாகாணம். |
| 3. செல்வி. எம். ரஜனி | கொ/இராமநாதன் இ. ம. க. கொழும்பு-04 | மேல் மாகாணம். |
| 4. செல்வி. ஜே. கேசினி | இ/பலாங்கொடை த. ம. வி. பலாங்கொடை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. சித்திசுராயா | ப/பண்டாரவளை த. ம. ம. வி. பண்டாரவளை | ஊவா மாகாணம். |
| 6. .................................. | . ......................... | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. ஏ. பிரியதர்ஷினி | நு/ஹைலன்ஸ் ம. ம. வி. அட்டன் | மத்திய மாகாணம். |
| 8. செல்வி. ஜே. மதுமதி | சிலா/நஸ்ரியா மு. ம. வி., சிலாபம் | வடமேல் மாகாணம். |

**4.12 பிரிவு 4 - நடனம் - தனி**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. ந. இரம்யவாணி | தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயம், திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. ........................................ | ........................................................................ | தென் மாகாணம். |
| 3. செல்வி. கே. பிரமிளா | கொ/சைவமங்கையர் வி. கொழும்பு-06. | மேல் மாகாணம். |
| 4. ........................................ | ........................................................................ | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ........................................ | ........................................................................ | ஊவா மாகாணம். |
| 6. ........................................ | ........................................................................ | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. பி. பிரசாந்தினி | நு/ஹைலன்ஸ் ம. ம. வி. அட்டன். | மத்திய மாகாணம். |
| 8. ........................................ | ........................................................................ | வட மேல் மாகாணம். |

**4.13 பிரிவு - 1 - நடனம் - குழு**

| | | |
|---|---|---|
| 1. வ/இறம்பைக்குளம் மகளிர் ம. வி. | வவுனியா | வட-கிழக்கு மாகாணம். |
| 2. மாறை/அறபாக. வி. | வெலிகம | தென் மாகாணம். |
| 3. கொ/இராமநாதன். இ. ம. க. | கொழும்பு-04 | மேல் மாகாணம் |
| 4. கே/புளத்கொகுப்பிட்டிய. த. ம. வி. | எட்டியாந்தோட்டை | சப்பிரகமுவ மாகாணம. |
| 5. ப/பண்டாரவளை. த. ம. வி. | பண்டாரவளை, | ஊவா மாகாணம். |
| 6. பொ/பொலன்னறுவை. மு. ம. ம. வி. | விஜிதபுர | வடமத்திய மாகாணம். |
| 7. நு/கொட்டக்கலை. த ம. வி. | கொட்டக்கலை, நுவரெலியா | மத்திய மாகாணம். |
| 8. சியா/வடிவாம்பிகா. த. வி. | சிலாபம் | வடமேல் மாகாணம். |

**4.13 பிரிவு-2 - நடனம் - குழு**

| | | |
|---|---|---|
| 1. தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயம். | திருகோணமலை | வட-கிழக்கு மாகாணம். |
| 2. ஹ/ஸாஹிரா. ம. ம. வி. | ஹம்பாந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. கொ/நல்லாயன். பெ. ம. வி. | கொழும்பு-13 | மேல் மாகாணம். |
| 4. இ/சீ. சீ. த. வி. | பலாங்கொடை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ப/அப்புத்தளை. த. ம. வி. | அப்புத்தளை | ஊவா மாகாணம். |
| 6. அ/ஸாஹிறா. ம. வி. | அநுராதபுரம் | வடமத்திய மாகாணம். |
| 7. க/பெண்கள் உயர் பாடசாலை. | கண்டி, கங்கேவத்தை | மதநிய மாகாணம். |
| 8. கு/இந்து தமிழ். ம. வி. | குருநாகல் | வடமேல் மாகாணம். |

**4.13 பிரிவு- 3 - நடனம் - குழு**

| | | |
|---|---|---|
| 1. வ/இறம்பைக்குளம் மகளிர். ம. வி. | வவுனியா | வட-பிழக்கு மாகாணம். |
| 2. கா/ஸாஹிரா. ம. வி. | குருந்துவத்த, கிந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. கொ/சாந்த கிளேயஸ். ம. வி. | கொழும்பு-06 | மேல் மாகாணம். |
| 4. கே/புளத் கொஹோபிட்டிய. த. ம. வி. | எட்டியாந்தோட்டை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ப/பசறை. த. ம. வி. | பசறை | ஊவா மாகாணம். |
| 6. அ/கலாவெவ. மு. ம. ம. வி. | விஜிதபுர | வட மத்திய மாகாணம். |
| 7. அ/கொட்டகலை. த. ம. வி. | கொட்டக்கலை, நுவரெலியா | மத்திய மாகாணம். |
| 8. சிவா/வடிவாம்பிகா தமிழ். வி. | சிலாபம். | வடமேல் மாகாணம். |

**4.13 - பிரிவு - 4 - நடனம் - குழு**

| | | |
|---|---|---|
| 1. தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயம். | திருகோணமலை. | வட-கிழக்கு மாகாணம். |
| 2. .................................................. | .............................. | தென் மாகாணம். |
| 3. கொ/சைவ மங்கையர் வித்தியாலயம். | கொழும்பு-06 | மேல் மாகாணம். |
| 4. .................................................. | .............................. | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. .................................................. | .............................. | ஊவா மாகாணம். |
| 6. அ/கலாவெவ. மு. ம. ம. வி. | விஜிதபுர | வட மத்திய மாகாணம். |
| 7. நு/ஹைலன்ஸ். ம. ம. வி. | அட்டன் | மத்திய மாகாணம். |
| 8. .................................................. | .............................. | வடமேல் மாகாணம். |

**4.15 - திறந்த போட்டி - சமூகநாடகம்**

| | | |
|---|---|---|
| 1. தி/புனிதகுசையப்பர் கல்லூரி. | திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. கா/திலித்துற த. க. வி | எத்கந்துற | தென்மாகானம். |
| 3. கொ/சைவமங்கையர் வி. | கொழும்பு-06 | மேல் மாகாணம். |
| 4. கே/ஸாஹிராம ம. வி | மாவனெல்ல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ........................................... | ........................ | ஊவா மாகாம். |
| 6. அ/ஹொறவ பொத்தான மு. வி. | ஹொறவபொத்தன | வடமத்திய மாகாணம் |
| 7. நு/சென்மேரிஸ் த. ம. வி | பொகவந்தலாவ, அம்பகமுவ | மத்திய மாகாணம். |
| 8. கல்/அல்-அக்ஸா ம. வி | கற்பிட்டி | வடமேல் மாகாணம். |

**4.16 - திறந்த போட்டி - நாட்டியநாடகம்**

| | | |
|---|---|---|
| 1. தி/ஸ்ரீ சண்முக வித்தியாலயம் | திருகோணமலை | வடக்குக்கிழக்கு மாகாணம். |
| 2. ............................................. | .............................. | தென் மாகாணம். |
| 3. 1. கொ/சைவமங்கையர் வி. | கொழும்பு-06 | மேல் மாகாணம். |
| 11. கொ/நல்லாயன் பெ. ம. வி. | கொழும்பு-13 | மேல் மாகாணம். |
| 4. கே/கராகொட மு. ம. வி | எட்டியாந்தோட்டை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ........................................... | ............................. | ஊவா மாகாணம். |
| 6. ........................................... | .............................. | வட மத்திய. மாகாணம். |
| 7. நு/ஹைலன்ஸ் ம. ம. வி. | அட்டன், அம்பகமுவ | மத்திய மாகாணம். |
| 8. ஆர/மர் மாருக் ம. வி. | ஆராச்சிக்கட்டுவ | வடமேல் மாகாணம். |

**4.17 - திறந்த போட்டி - நாட்டுக்கூத்து**

| | | |
|---|---|---|
| 1. மட்/புனித சிசிலியா பெ. ம. வி. | மட்டக்களப்பு | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. கா/திவித்துற த. க. வி | எத்கந்துற | தென்மாகாணம். |
| 3. கொ/இராமநாதன் இ. ம. க. | கொழும்பு-04 | மேல் மாகாணம்.சப்பிரகமுவ மாகாணம். |
| 4. இ/ஹல்லின்ன த. வி | வெலிகபொல | |
| 5. ................................. | .................... | ஊவா மாகாணம். |
| 6. ................................. | .................... | வட மத்திய மாகாணம். |
| 7. நு/கலரவில த. வி | அப்கொட், அம்பகமுவ | மத்திய மாகாணம். |
| 8. ஆரா/உடப்பு க. வி. | ஆராச்சிக்கட்டுவ | வடமேல் மாகாணம். |

**4.18 - திறந்தபோட்டி - விவாதம் - இயல் - உரைதழுவியது**

| | | |
|---|---|---|
| 1. தி/புனிதகுசையப்பர் கல்லூரி | திருகோணமலை | வடக்கிழக்கு மாகாணம். |
| 2. கா/ஸாஹிரா ம. வி | குருத்துவத்த, கிந்தோட்டை | தென் மாகாணம். |
| 3. கொ/வெஸ்லி கல்லூரி | கொழும்பு-09 | மேல் மாகாணம். |
| 4. கே/கலைமானியா ம. ம. வி | ருவான்வெல்ல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ........................................... | ...................... | ஊவா மாகாணம். |
| 6. ........................................... | ............ | வடமத்திய மாகாணம் |
| 7. நு/ஹைலன்ஸ் ம. ம. வி | அட்டன் | மத்திய மாகாணம். |
| 8. கிலா/நஸ்ரியா மு. ம. வி | சிலாபம் | வடமேல் மாகாணம். |

**4.19 - திறந்தபோட்டி - இசை - உரை தழுவியது ( வில்லுப்பாட்டு/கதாப்பிரசங்கம்)**

| | | |
|---|---|---|
| 1. தி/இ. கி. மி. கோணேஸ்வரா இந்துக்கல்லூரி | திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. கா/திவித்துற த. க. வி. | எத்கந்துற | தென் மாகாணம். |
| 3. கொ/சைவமங்கையர் வித்தியாலயம் | கொழும்பு 6 | மேல் மாகாணம். |
| 4. கே/சுலைமானியா ம. ம. வி. | ருவான்வெல்ல | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. . . . . . . . . . . | . . . . . | ஊவா மாகாணம். |
| 6. பொ/ முஸ்லிம் ம. ம. வி. | கதுநுவெல | வடமத்திய மாகாணம். |
| 7. நு/ கவரவில த. வி. | அப்கொட்ட, அம்பகமுவ | மத்திய மாகாணம். |
| 8. கந்/ குறிஞ்சிப்பிட்டி அ. ம. வி. | கற்பிட்டி | வடமேல் மாகாணம். |

**4.20 - திறந்தபோட்டி - பல்லியம்**

| | | |
|---|---|---|
| 1. தி/இ. கி. ம.. ஸ்ரீகோணேஸ்வரா இந்துககல்லூரி | திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. ............................ | ........................... | தென் மாகாணம். |
| 3. கொ/இந்துக்கல்லூரி | கொழும்பு -04 | மேல் மாகாணம். |
| 4. கே/கராகொட மு. ம. வி | எட்டியாந்தோட்டை | சப்பிரகமுவ மாகாணம். |
| 5. ...................................... | .............................. | ஊவா மாகாணம். |
| 6. .................................... | ............................. | வடமத்திய மாகாணம். |
| 7. க/திரித்துவக்கல்லூரி | கண்டி, கங்கேவத்த | மத்திய மாகாணம். |
| 8. ..................................... | .............................. | வடமேல் மாகாணம். |

**4.21 - விசேட போட்டி - சிங்களமாணவருக்கான தமிழ்ப் பேச்சு.**

| | | |
|---|---|---|
| 1. செல்வி. ஈ. உ. சுகந்தி கெயசல்யா | தி/அபயபுர ம. வி. திருகோணமலை | வடக்குகிழக்கு மாகாணம். |
| 2. செல்வி. அனுசாரெங்கன் ஜினேந்திர | ஹ/வலஸ்முல்ல முண்மாதிரி ஆரம்பவித்தி வலஸ்முல்ல. | தென் மாகாணம். |
| 3. செல்வன். அரேசன்பிரசன்ன | கொ/வெஸ்லிகல்லூரி, கொழும்பு 09 | மேல் மாகாணம். |
| 4. செல்வி. நிலூக்காக சாமலி பண்டார | கே/மேச்சேரிகம முன்மாதிரி கனிஷ்ட வித்தியாலய ஹிங்குல | சுப்பிரகமுவ மாகாணம். |
| 5. செல்வி. றஸீக்கா தரங்கனி சமரக்கோன் | மொ/மடுக்கொட்டன்றா வ. ம. வி. படல் கும்பர | ஊவா மாகாணம். |
| 6. செல்வி. வாசுலா றுக்ஸாமி சுபசிங்க | அ/சுவர்ணபாலி பாலிகா வி. அநுரதபுரம் | வடமத்திய மாகாணம். |
| 7. செல்வி. ஜொசப்பின் மேரி பெரேரா | க/நல்லாயன் மக. வி. கண்டி | மத்திய மாகாணம். |
| 8. ........................................................ | ............................................... | வடமேல் மாகாணம். |

**வதிவிடப் பாடசாலைகள்**

1. இராமநாதன் இந்துமகளிர் கல்லூரி பம்பலப்பிட்டி,
2. இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி
3. முஸ்லீம் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி
4. புனித, பீற்றர்ஸ் கல்லூரி, பம்பலப்பிட்டி
5. இந்து மகளிர் கல்லூரி, வெள்ளவத்தை

அகில இலங்கைத்
தமிழ் மொழித் தினவிழாவுக்கு
எமது வாழ்த்துக்கள்

"மகன் தந்தைக் காற்றுமுதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல் எனும் சொல்"

## "மஸ்தான் ரேடேஸ்"

றிஜிஸ்ரேட் றான்ஸ்போட் ஏஜன்ட்
(வவுனியா றான்ஸ்போட்)

காரியாலயம்
140, டாம் ஸ்றீற்
கொழும்பு - 12.
தொலைபேசி : 327936

கிளை
3, ஹொறப்பத் தானை வீதி,
வவுனியா.
தொலைபேசி : 024 - 2505

# Masthan Traders

Registered Transports Agents
(Vavuniya Transporters)

**Office :**
**140, Dam Street**
**Colombo 12**
**T'Phone : 327936**

**Branch**
**3, Horowapathana Road,**
**Vavuniya**
**T'Phone : 024 - 2505**

*With Best Compliments*

# Eswaran Brothers

## 267, Sea Street,
## Colombo 11.

**Tele : 422744, 432599, 422864, 431741**

**Importers of Sugar Cement, Canned Fish and other Food Items**

**Wholesale Outlet at :**
149, 4th Cross Street,
Colombo 11.
Tele : 26239, 28805.

*With Best Compliments*
*From*

# Hotel Vegelands (Pvt) Ltd.,

FOR SPACIOUS ROOMS

AND DELICIOUS FOOD

Visit

Hotel Vegelands (Pvt) Ltd.,

No. 26, Palmyrah Mawatha,

Colombo 3.

T.P. No. 582727, 588876